லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-08 இதழ்-10 மார்ச் - 2020 மாதஇதழ் விலை ₹ 10

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INDIA
ISSN : 2582-5275



## மக்கள் நல திட்டங்களால்
## சாதனை படைத்த
## முதல்வர் பழனிசாமி

makkalvisaranai


வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
GENERAL ENERGY TONIC
Herbal Tonic
Natural Health Care
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## அதிகரிக்கும் கடன் சுமை

தமிழக நிதிநிலை அறிக்கை 2020-21 ம் ஆண்டுக்கான தாக்கல் செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும் போது தமிழக அரசு மூன்று மடங்கு கடனில் மூழ்கியுள்ளது. இந்த கடனை எந்த வகையில் அடைக்கப்போகிறது என்று அரசு அறிவிக்கவில்லை. ஆனால் அனைத்து திட்டங்களுக்கும் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கி அறிவிப்பு வெளியாகியுள்ளது. மக்கள் பயன்பெறும் வகையில் வளர்ச்சி திட்டங்களோ, தொலைநோக்கு திட்டங்களோ இடம் பெறாமல் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையை மக்கள் முன் அரசு சமர்ப்பித்துள்ளது. தமிழக அரசின் கடன் 4.56 லட்சம் கோடி என்று கூறப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பார்த்தால் தமிழகத்தில் ஒரு குடிமகன் தலையில் ரூ. 63 ஆயிரம் கடன் உள்ளது. 2020-21ம் ஆண்டுக்கான நிதி வருவாய் ₹2 லட்சத்து 16 ஆயிரத்து 438 கோடியாக இருக்கும் என்று அறிவித்துள்ள நிலையில், மத்திய அரசிடமிருந்து ரூ.64,254 கோடி தமிழகத்துக்கு வர வேண்டிய நிலுவை உள்ளது. அரசின் செலவினங்கள் ₹2 லட்சத்து 26 ஆயிரத்து 685 கோடியாக உள்ளது. இதில் 38,210 கோடி கடனுக்கான வட்டியாக கட்டப்படுகிறது. ஆகமொத்தம் வருவாய் பற்றாக்குறை ரூ.10,040 கோடி என்று கூறப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடி இருந்தாலும் வளர்ச்சியை நோக்கி தமிழக பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் கூறப்படுகிறது. சாலைகள், பாசனவசதி, மின் திட்டங்கள், சுகாதாரத்துறை, குடிநீர் திட்டங்கள் உள்பட அனைத்து திட்டங்களுக்கும் கடந்த ஆண்டை விட 26 சதவீதம் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கியது மகிழ்ச்சியான விஷயம் என்றாலும், இதற்கான நிதி எங்கிருந்து எப்படி பெறப்படும் என்ற தெளிவு இல்லாததால் வெற்று அறிக்கையாகவே இது பார்க்கப்படுகிறது. நிதி நெருக்கடியில் அரசு இருப்பதை ஆட்சியாளர்களே உணர்ந்துள்ளதால் தான் கவர்ச்சி அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. அதே நேரம் கடந்த கால திட்டங்களே நிதி நெருக்கடியால் தொடர்ந்து அமல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில் கூடுதல் நிதி என்று எப்படி அறிவிக்கிறார்கள் என்று நிதிநிலை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.


தமிழகத்தின் கடன்சுமை கட்டுப்பாடின்றி அதிகரித்துள்ளது கவலை அளிக்கிறது என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளது. 2011ம் ஆண்டு ஆட்சியில் இருந்து திமுக விலகிய போது 1 லட்சம் கோடி கடன் சுமை இருந்தது. தற்போது இது 4 லட்சம் கோடியாக மூன்று மடங்கு அதிகரித்துவிட்டது என்று எதிர்க்கட்சி தலைவர் விமர்சித்துள்ளார். அதிமுக அரசின் கடைசி முழு பட்ஜெட் என்பதால் கடன்பட்டாவது அறிவித்துவிடுவோம் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்பட்டால் புதிய அரசு அதை சமாளித்துக்கொள்ளட்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்த பட்ஜெட்டாகவே இதை கணிக்க தோன்றுகிறது என்று சமூக ஆர்வலர்களும், அரசியல் விமர்சகர்களும் கூறுகின்றனர். நிதி நெருக்கடியில் பல்வேறு திட்டங்களுக்கு கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கி தமிழக மக்களை மேலும் கடன்காரனாக்கியது தான் பட்ஜெட்டின் சாதனையாக தெரிகிறது.


**- ஆசிரியர்**

# பருவநிலை மாற்றத்தை தமிழில் அளிக்கவும் வேண்டுகோள்

உலக அளவில் பருவநிலை மாற்றம் பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது. நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயுபோன்றவை அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால், அதிக அளவில்கரியமிலவாயு வெளியிடப் படுகிறது. இதன் காரணமாக புவிவெப்ப நிலை உயர்ந்து, அண்டார்ட்டிகா போன்ற பகுதிகளில் பனிப் பாறைகள் உருகி வருகின்றன. அதனால் கடல் நீர் மட்டம் உயர்வு, கடலோரப் பகுதிகள் மூழ்குதல், எதிர்பாராத அதிகனமழை, வெள்ளம், கடும் வறட்சி, புயல், பருவம்தவறிய மழை உள்ளிட்ட பல்வேறுஇயற்கை பேரிடர்கள் ஏற்படுகின்றன. கடந்த 100 ஆண்டுகளில் சராசரியாக 1.5 டிகிரி செல்சியஸ் வெப்பம்அதிகரித்திருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலையே தொடர்ந்தால், அடுத்து வரும் 100 ஆண்டுகளில் 3 டிகிரி முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை புவி வெப்பம் அதிகரிக்கும் என கருதப்படுகிறது. கரியமில வாயுவை வெளியிடும் நாடுகளில் சீனா முதல் இடத்திலும், இந்தியா 4-வது இடத்திலும் உள்ளன. இங்கு ஆண்டுக்கு 2 ஆயிரத்து 622 மெகா டன் (ஒரு மெகா டன் என்பது 10 லட்சம் டன்) கரியமில வாயு வெளியிடப்படுகிறது.

இதன் காரணமாக மத்திய அரசு சார்பில், அடுத்த 10 ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் செயல்திட்டம் உருவாக்கப்பட்டு கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது. அதைபின்பற்றி தமிழக அரசு சார்பில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள் வதற்கான வரைவு செயல்திட்டம் கடந்த மாதம் வெளியிடப்பட்டது.





இந்த வரைவு செயல்திட்டத்துக்கு ரூ.3 லட்சத்து 24 ஆயிரம்கோடியை செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மத்திய, மாநில அரசுகள் சார்பில் ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் கோடி செலவிடப்பட உள்ளது. ரூ.1 லட்சத்து 3 ஆயிரம் கோடி பற்றாக்குறையாக உள்ளது. 2020-21 நிதியாண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட் ரூ.2 லட்சத்து 19 ஆயிரம் கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வரைவு அறிக்கை தொடர்பாக பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த கோ.சுந்தர்ராஜன் கூறியதாவது: இந்த வரைவு அறிக்கையில்,தமிழகத்தில் வாகன போக்குவரத்து, தொழிற்சாலைகள், மின் உற்பத்தி, வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் தனித்தனியே எவ்வளவு கரியமில வாயு வெளியேறுகிறது, அதை குறைக்க அரசு என்னசெய்யப்போகிறது என்பது தொடர்பான எந்த தரவுகளும் இல்லை. மேற்கு தொடர்ச்சி மலையோர மாவட்டங்களில் வழக்கத்தை விட 40 சதவீதம் அதிகமாகவும், உள் மாவட்டங்களில் 40 சதவீதம் குறைவாகவும் மழை பெய்கிறது. அந்த அளவுக்கு பருவநிலை மாற்றத்தால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

**7 வேளாண் மண்டலங்கள்:** இந்நிலையில் தமிழகத்தை 7 வேளாண் வானிலை மண்லங்களாக பிரித்து பணிகளை மேற்கொள்ள இருப்பதாக குறிப்பிடப் பட்டுள்ளது. தாலுகா அளவிலோ, பிர்கா அளவிலோ திட்டமிட்டால்தான் சரியாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கமாநில பொதுச்செயலர்எஸ்.சுப்ரமணிவெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒவ்வொரு மனிதன் மீதும், எதிர்கால மக்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் பருவநிலை மாற்றம் தொடர்பான வரைவு செயல்திட்டம், முற்றாக ஆங்கிலத்தில் உள்ளதை கவலையுடன் பார்க்கிறோம். இப்பிரச்சினையை ஒவ்வொரு தரப்பு மக்களும் விவாதிக்க வேண்டும். அதனால் இந்த வரைவு அறிக்கையை தமிழில் வெளியிட வேண்டும். மாவட்ட அளவில் விரிவான கருத்து கேட்பு கூட்டங்களை நடத்த வேண்டும். அதிக பக்கங்களைக் கொண்ட அறிக்கையை படித்து புரிந்து கருத்து தெரிவிப்பதற்கான அவகாசத்தை நீட்டிக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

- K. ரமேஷ்குமார்

# ஹெல்மெட்களை தேர்வு செய்வதில் கவனம் தேவை

தமிழகத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுபவர்களில் 43 சதவீதம் பேர் மட்டுமே ஹெல்மெட் அணிவதும், அவர்களில் 16 சதவீதம் பேர் முழு மனதுடனும், 13 சதவீதம் பேர் சட்டம் மற்றும் அபராதத்துக்கு பயந்தும், 22 சதவீதம் பேர் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கட்டாயப்படுத்து வதாலும் அணிவதும் ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

தமிழகத்தில் இரு சக்கர வாகன ஓட்டிகள் ஹெல்மெட் அணிவது கட்டாயமாக்கப்பட்ட பின்னர், ஹெல்மெட் அணிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால், உயிரைக் காப்பாற்றும் என்று நம்பி அணியும் ஹெல்மெட்கள், சரியான தரத்தில் தயாரிக்கப் படாததால் ஹெல்மெட் அணிந்தும் பலர் உயிரிழக்க நேரிடுகிறது. தமிழகத்தில் கடந்த ஆண்டு நடந்த இருசக்கர வாகன விபத்துகளில் ஹெல்மெட் அணிந்தும் 270 பேர் பலியாகியுள்ளனர். இதில் பலர் தரமில்லாத ஹெல்மெட்களைப் பயன்படுத்தி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

**ஹெல்மெட் உருவான கதை:** 1935-ம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த லாரன்ஸ் ஆஃப் அராபியா என்பவர் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது, குறுக்கே இரு சிறுவர்கள் சைக்கிளில் வந்து விட்டனர். இந்த விபத்தில் சிக்கிய லாரன்ஸ், தலையில் அடிபட்ட நிலையில் மருத்துவமனையில் 6 நாள் கோமாவில் இருந்து உயிரிழந்தார். லண்டன் மருத்துவர்களை இந்தச் சம்பவம் வெகு வாக பாதிக்க, 1941-ம் ஆண்டு 'பிரிட்டீஸ் மெடிக்கல் சயின்ஸ் ஜர்னல்'க்கு இரு சக்கர வாகன விபத்துகளால் தலையில் அடிபட்டு இறப்பவர்கள் குறித்த ஓர் அறிக்கையை டாக்டர் கெய்ர்ன்ஸ் என்பவர் சமர்ப்பித்தார். விபத்தில் இருந்து தலையை காப்பதற்கு ஒரு பொருள் தேவை என்பதை முதல்முறையாக அந்த அறிக்கை உணர்த்தியது.



அதே ஆண்டின் இறுதியில் பிரிட்டீஸ் ராணுவத்தில் பணிபுரிந்த 2 வீரர்கள் இரு சக்கர வாகன விபத்தில் உயிரிழக்க, ராணுவ வீரர்கள் அனைவரும் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்று முதல் முறையாக அறிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து மரம் மற்றும் ரப்பரைக் கொண்டு தலையை மட்டும் மறைக்கும் வகையில் ஹெல்மெட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தன.

1953-ம் ஆண்டு தெற்கு கரோலினா பல்கலைக்கழக பேராசிரியர் சி.எப்.லம்பார்டு என்பவர் ஹெல்மெட்டுக்குள் பஞ்சு போன்ற பொருட் களை வைத்து தயாரித்து, ஹெல்மெட் அணிந்து வாகனம் ஓட்டும் போது தலையில் ஏற்படும் அதிர்வுகளை குறைத்தார். 1971-ம் கீகீஆண்டு ராய் ரிச்சர்டு என்பவர்தான் நாம் இப்போது பயன்படுத்தும், தலை முழுவதும் மறைக்கும் ஹெல்மெட்டை கண்டுபிடித்தார். உலகிலேயே முதல்முறையாக ஆஸ்தி ரேலியா நாட்டில்தான் ஹெல்மெட் கட்டாய சட்டம் 1961-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி அமல்படுத்தப்பட்டது.

**'ஸ்நெல்', 'டாட்' தரச்சான்று:** 1957-ம் ஆண்டு வில்லியம் ஸ்நெல் என்ற கார் பந்தய வீரர் விபத்தில் சிக்கி, தலையில் காயம் ஏற்பட்டு

உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து கனடாவில் 'ஸ்நெல் மெமோரியல் பவுண்டேஷன்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. உலகம் முழுவதும் தயாரிக்கப்படும் ஹெல்மெட்களின் தரத்தை பரிசோதனை செய்து அங்கீகாரம் கொடுக்கும் பணியை இந்த அமைப்பு செய்து வருகிறது. ஸ்நெல் அங்கீகாரம் பெற்ற ஹெல்மெட்கள் மிகவும் தரமானவை. இதேபோல் அமெரிக்காவின் 'DOT' (டிபார்ட்மென்ட் ஆப் டிரான்ஸ் போர்ட்), பெல்ஜியத்தின் 'இசிஇ' போன்ற அமைப்புகளின் அங்கீகாரம் பெற்ற ஹெல்மெட்கள் உலக அளவில் மிகவும் தரமானவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஹெல்மெட்களின் குறைந்தபட்ச விலையே ரூ.4 ஆயிரம். ஆனால் இந்த வகையான ஹெல்மெட்களை இந்தியாவில் யாருமே பெருமளவில் விற்பனை செய்யவில்லை.

**'ஐஎஸ்ஐ' கட்டாயம் தேவை:** இந்தியாவில் விற்கப்படும் ஹெல்மெட்கள் 1 கிலோ 200 கிராம் எடைக்குள் இருக்க வேண்டும் என்று 'ப்யூரோ ஆப் இந்தியன் ஸ்டேன்டர்ட்ஸ்' (பிஐஎஸ்) நிபந்தனை விதித்தது. ஆனால், இந்த நிபந்தனையால் தரமில்லாத ஹெல்மெட்கள் தயாரிக்கப்படும் என்று கூறப்பட்டதால் 2018-ம் ஆண்டு இந்த நிபந்தனை நீக்கப்பட்டது. தற்போது இந்தியாவில் ஐஎஸ்ஐ முத்திரையுடன் கூடிய ஹெல்மெட் கள் 1.5 கிலோ எடையுடன் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, ஹெல்மெட்களைத் தேர்வு செய்யும் போது, அவை நமது தலைக்கு சரியாக பொருந்துகிறதா, ஐஎஸ்ஐ அல்லது பிஐஎஸ் தரச்சான்று இருக்கிறதா, உண்மையில் அது தரமான ஹெல்மெட்டா என்பதைப் பார்த்து வாங்கவேண்டும்.

ஹெல்மெட்களில் 'டபுள் டி லாக்' இருப்பது அவசியம். 'டபுள் டி லாக்' உள்ள ஹெல்மெட்கள் அணிந்தால், விபத்தின்போது தலையில் இருந்து ஹெல்மெட்கள் கழன்றுவிடாமல் இருக்கும் என ஹெல்மெட் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- *அகிலாண்டேஸ்வரி*


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-08 இதழ்-10 மார்ச் - 2020

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன்**, M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
N.சிலம்பரசு தர்மபுரி, A.D.ராஜேந்திரன் விழுப்புரம்
குருபாலகிருஷ்ணன், R.ஜெயா தென்சென்னை
S.மோகன், P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், B.நாராயணசாமி, C. அன்பழகன்
G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், R. சத்தியமூர்த்தி
M.முருகன், M.சரவணன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# மக்கள் நல திட்டங்களால் சாதனை படைத்த முதல்வர் பழனிசாமி

சேலம் மாவட்டத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த பழனிசாமி, 2017-ம் ஆண்டு பிப்ரவரி 16-ம் தேதி தமிழகத்தின் 21-வது முதல்வராக பதவி யேற்றார். அதிமுக பொதுச் செயலாளராகவும் முதல்வராகவும் இருந்த ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுகவில் பல மாற்றங்கள், குழப்பங்கள் நிலவிய இக்கட்டான நேரத்தில்தான் முதல்வர் பதவியை ஏற்றார் பழனிசாமி. அதன்பின், தனது சாதுர்யமான நிர்வாகத்தால் ஆட்சியை தக்கவைத்ததுடன், பிரிந்து சென்ற ஓபிஎஸ் தரப்பையும் இணைத்து அதிமுக கட்சி, கொடி, இரட்டை இலை சின்னத்தையும் மீட்டெடுத்தார். அதிமுகவுக்குள் நிலவிய குழப்பங்களால் எத்தனை நாட்கள் இந்த ஆட்சி நீடிக்கும் என்று எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பலரும் கூறிவந்த நிலையில், சோதனைகளை எல்லாம் வென்று, 3 ஆண்டுகளை கடந்து 4-ம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது முதல்வர் பழனிசாமி தலைமையிலான அரசு.

ஜெயலலிதா வழியில் ஆட்சி நடத்துவதாக கூறிய பழனிசாமி, அவர் கொண்டுவந்த திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அத்துடன், பல புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத்தி, மக்கள் மத்தியில் தனக்கான செல்வாக்கை உயர்த்திக் கொண்டார். குறிப்பாக, குடிமராமத்து திட்டம், மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள், ரூ.1,000 பொங்கல் பரிசு, டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிப்பு என்பது போன்ற முதல்வரின் திட்டங்கள், மக்களை அவர் பக்கம் திரும்பச் செய்துள்ளது.

கடந்த 2015-ல் முதல் உலக முதலீட் டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்திய ஜெயலலிதா, ரூ.2 லட்சத்து 42 ஆயிரம் கோடிக்கான முதலீடுகளை ஈர்த்தார்.



அதேவழியில், 2019 ஜனவரியில் 2-வது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தலைமையேற்று நடத்திய முதல்வர் பழனிசாமி, ரூ.3 லட்சத்து 431 கோடி அளவுக்கான முதலீடு தமிழகத்துக்கு வர வாய்ப்பு ஏற்படுத்தினார். முதல்வராக பொறுப்பேற்ற பிறகு, கடந்த 3 ஆண்டுகளில் 16,382 கோப்பு களில் கையெழுத்திட்டு, பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை தொடங்கி வைத்துள்ளார்.

அரசின் தொடர் முயற்சிகளால் காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக தூர்வாரப்படாமலும், சீரமைக்கப்படாமலும் இருந்த பெரிய ஏரிகள், சிறு பாசன ஏரிகள், குளங்கள், ஊரணிகள், குட்டைகள் போன்றவற்றை தூர்வார, குடிமராமத்து திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் இதுவரை ரூ.930 கோடியே 25 லட்சத்தில் 4,965 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகளின் 60 ஆண்டு கனவான அத்திக்கடவு - அவிநாசி திட்டப்பணிகள் ரூ.1,652 கோடியில் நடந்து வருகின்றன. காவிரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதில் இருந்து மீட்டெடுக்க

ரூ.11,250 கோடியில், 'நடந்தாய் வாழி காவேரி திட்டம்' செயல்படுத்தப்பட உள்ளது. நடப்பு நிதியாண்டில் நெடுஞ்சாலைத் துறை மூலம் ரூ.22,096 கோடியில் 21,109 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 8,524 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து கழகங்களில் கடந்த 3 ஆண்டுகளில் 4,921 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சாதாரண மக்களும் அரசுப் பேருந்துகளில் சொகுசுப் பயணம் மேற்கொள்ளும் வகையில், தூங்கும் இருக்கை வசதியுடன் கூடிய 36 பேருந்துகள், படுக்கை வசதியுடன் கூடிய 106 குளிர்சாதன பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி ரூ.5,890 கோடியில் 12 ஆயிரம் புதிய பேருந்துகள், 2 ஆயிரம் புதிய மின்சார பேருந்துகள் வாங்க ஒப்பந்தம் போடப் பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவியர் இடை நிற்றலை தடுக்க ரூ.5,822 கோடியில் இலவச சீருடை, மடிக்கணினி உள்ளிட்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கல்வி தொடர்பான அனைத்து தகவல் களையும் தெரிந்து கொண்டு மாணவர்கள் பயன்பெற அரசு சார்பில் கல்வி தொலைக்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பை பெற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு 4 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டும், தமிழகத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர், அரியலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள காவிரி டெல்டா பகுதிகள், 'பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலம்' ஆக மாற்றப்படும் என முதல்வர் அறிவித் துள்ளார். பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப் பட்டு 35 லட்சத்து 43 ஆயிரத்து 700 விவசாயி களுக்கு ரூ.7,528 கோடிக்கு இழப்பீடு அளிக்கப்பட்டுள்ளது.



**பிளாஸ்டிக் தடை:** தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 2.30 லட்சம் தனிநபர் குடியிருப்பு கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலை மேம்படுத்தி, மாசற்ற தமிழகத்தை உருவாக்கும் வகையில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதிக அளவில் வெளிநாட்டு முதலீடுகளை தமிழகத்துக்கு ஈர்ப்பதற்காக அமெரிக்கா, இங்கிலாந்து, துபாய் நாடுகளுக்கு முதல்வர் பழனிசாமி பயணம் மேற்கொண்டார். இதன்மூலம் ரூ.19,136 கோடியில் 83,837 புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயிர்க்கடனாக 34 லட்சம் விவசாயி களுக்கு ரூ.22,031 கோடியே 69 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் சூரிய மின்சக்தி வீடுகள் திட்டத்தில் ரூ.1,680 கோடியில் 80 ஆயிரம் வீடுகளும், பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தில் ரூ.8,968 கோடியில் 5 லட்சத்து 27 ஆயிரம் வீடுகளும் கட்டப் பட்டுள்ளன. முதல்வரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தின் மூலம் 4 லட்சத்து 80 ஆயிரத்து 876 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து மக்கள் அச்சமின்றி வாழ 3.28 லட்சம் சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தூய்மை பாரத திட்டத்தின் கீழ் ஊரக தூய்மைப் பணியில் மாநிலத்துக்கான விருது, பெண் குழந்தைகளை காப்போம்; பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்துக்கான விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை மத்திய அரசிடம் இருந்து தமிழகம் பெற்றுள்ளது. இதுபோன்ற பல மக்கள் நல திட்டங்களால் மகத்தான சாதனை படைத்துள்ளது முதல்வர் பழனிசாமியின் அரசு.

\- *ஆசிரியர்*

முனைவர் ஆ.மவுரியன்



தொடர் 28

வீரத்தமிழச்சிகளின் வரலாறு



## தமிழின் முதல் பெண் நாவலாசிரியர்

# வை. மு. கோதைநாயகி

**சுதந்திர போராட்டத்தில் சிறை சென்றவர்களை வன்முறை பாதையிலிருந்து திசை திருப்பி காந்திய பாதைக்குக் கொண்டு சென்றவர்**

ஜகன்மோகினி இதழின் வாசகர் எண்ணிக்கை உயரத் தொடங்கியது. இதனால் வடுவூரார் நடத்தி வந்த மனோரஞ்சனி தேக்கநிலையை அடைந்தது. கோதைநாயகி எழுதிய வைதேகி என்ற கதையை வடுவூரார் பிழைதிருத்தித் தருவதாக வாங்கிச் சென்றார். பொறாமை காரணமாக “நான்தான் வை.மு. கோதை நாயகிக்காக ‘வைதேகி’ என்ற புதினத்தை எழுதிக் கொடுத்தேன். இனி வைதேகி ஜகன்மோகினியில் தொடராது” என்று வடுவூரார் அறிவித்தார். ஆனாலும், கோதைநாயகி தன்னுடைய நினைவுத்திறன் கொண்டே வைதேகியையை ஜகன்மோகினியில் தொடர்ந்து எழுதி, தான் எழுதியதாகக் கூறிய வடுவூராரின் கூற்றைப் பொய்யாக்கினார்.

கோதைநாயகியின் எழுத்தாற்றல் தமிழ் வாசகர்களிடையே பரவியது. அதனால், கோதைநாயகி ஜகன்மோகினியில் பல்வேறு பகுதிகளையும் சேர்த்து மற்ற இதழ்கள் போல் வெளியிடலானார். புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளையும் வெளியிட்டார். விற்பனை கூடியது. தமிழ்நாட்டில் ‘ஜகன்மோகினி’ முன்னணி இதழ்களுள் ஒன்றாக முன்னேறியது. கோதை நாயகி, தனது பல புதினங்களை ஜகன்மோகினியின் மூலம் தான் எழுதினார். இந்து - இசுலாமியர் ஒற்றுமை, பெண் விடுதலை, நாட்டுப்பற்று, மதுவிலக்கு, விதவை திருமணம் ஆகியவற்றை புதினங்கள் மூலம் வலியுறுத்தி எழுதினார். மொத்தம் 115 புதினங்களை இவர் எழுதினார். 1937ஆம் ஆண்டு சொந்த அச்சகம் ஒன்றை நிறுவி அச்சுத்தொழிலிலும் சிறந்து விளங்கினார்.

இவரது மேடைப் பேச்சுக்களைக் கேட்க ஏராளமானோர் கூடுவார்கள். பேசும் போது இடையிடையே குட்டிக் குட்டிக் கதைகளைச் சொல்லுவார். காங்கிரஸ் இயக்கத்தில் செயல்திறன் மிக்க உறுப்பினராக வை.மு.கோ. அம்மையார் விளங்கினார். தீரர் சத்தியமூர்த்தி, காமராசர், மூதறிஞர் இராஜாஜி போன்றோர் அம்மையாருடன் நட்புடையவர்களாக இருந்தனர். தீரர் சத்தியமூர்த்தியின் கூட்டங்களில் அம்மையார் கலந்து கொண்டு கடவுள் வாழ்த்துப் பாடலையும், பாரதியாரின் தேசிய எழுச்சி மிக்க பாடல்களையும் பாடியுள்ளார். ராஜாஜியின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டத்தில் இவர் பேசியதைக் கேட்டு, தான் பேசும் கூட்டங்களிலெல்லாம் இவரையும் பேசச் சொல்லி அன்பாக உத்தரவிட்டார் ராஜாஜி.

வை.மு.கோ. அம்மையார் இசையில் மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்கினார். கருநாடக இசைப் பாடல்களைப் பாடுவதிலும்

வல்லவராக இவர் இருந்தார். அவரது குரல் வளம், உச்சரிப்பு, பாடும் திறன் பலரை அவர் பாட்டுக்கு அடிமையாக்கியிருந்தது. காங்கிரஸ் மேடைகள் தோறும் நாட்டுப்பற்று உள்ள பாடல்களைஅம்மையார் பாடினார். அத்துடன் வீட்டில் முடங்கிக் கிடந்த பெண்களின் இசைஆற்றலை வெளிக் கொணரப் பாடுபட்டுள்ளார். அந்த வரிசையில் ஒருவர் புகழ் பெற்ற டி. கே. பட்டம்மாள் ஆவார். வை.மு.கோ. இனிய குரலில் பாடுவதை மெய்மறந்து பாரதியார் இரசித்ததாகக் கூறுவார்கள். மகாகவி பாரதியாரின் பாராட்டைப் பெற்றவர். அம்மையார் வானொலியிலும் இசைநிகழ்ச்சிகளை வழங்கி அதனை இசைத்தட்டுக்களாகவும் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வை.மு.கோ. மேடைகளில் பாடுவதன்றி பல பாட்டுகளையும் புனைந்துள்ளார். இவர் சில அபூர்வ ராகங்களில் இயற்றிய கிருதிகள் எல்லாம் சமீபத்தில் 'இசை மார்க்கம்' என்ற புத்தகமாக வெளி வந்துள்ளன. முப்பதுகளில் வை.மு.கோ வீட்டில் வசித்த பி.ராமபத்ரன் என்பவர் இப்புத்தகத்தைப் பதிப்பித்துள்ளார். அம்பா மனோஹரி, கங்கணாலங்காரி, அம்சப்ரமாரி, தவளி ஹம்சி போன்ற அபூர்வ ராகங்களிலுள்ள இந்த கிருதிகள், கர்நாடக இசைப் பாடகர்களால் இப்போது மேடைகளில் பாடப்பட்டு வருகின்றன. சுப்பிரமணிய பாரதியார், வை.மு.கோ.விற்காகவே தம் ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே என்ற பாட்டைப் புனைந்ததாகவும், பின்னர் டி. கே. பட்டம்மாள் இந்தப் பாட்டினால் பிரபலமானார் என்பது மற்றொரு செய்தியாகும்.

பத்திரிகையாளராக, நாவலாசிரியராக மட்டுமிருந்த வை.மு.கோ.வுக்கு அன்னி பெசன்ட் அம்மையார் மூலமாக தேசபக்தர், சமூகத் தொண்டர் அம்புஜம் அம்மாளின் நட்பு ஏற்பட்டது. தந்தை சீனிவாச ஐயங்கார் இல்லத்துக்கு 1925ஆம் ஆண்டு மகாத்மா காந்தி வருகை தந்த போது வை.மு.கோதை நாயகி அம்மாள் காந்தியைச் சந்தித்தார். இந்நிகழ்வு வை.மு.கோவின் வாழ்க்கையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. காந்தியின் எளிமையான தோற்றமும், ஆராவாரமற்ற



அவரது உறுதியான நாவன்மையும் அம்மையாரை மிகவும் கவர்ந்தது. பட்டாடையே உடுத்திப் பழக்கப்பட்ட வை.மு.கோ. அது முதல் கதர் புடவையையே அணியத்தொடங்கினார். மங்கல நாணைத் தவிர ஆடம்பரமான அணிகலன்களைத் தவிர்த்து, வேறு நகைகளை அணிவதில்லை என்று உறுதி பூண்டு அதையும் இறுதி வரையில் கடைப்பிடித்தார். பின்பு அம்புஜம் அம்மையார், ருக்மணி இலட்சுமிபதி, வசுமதி இராமசாமி ஆகியவர்களுடன் இணைந்து சமூக சேவையில் ஈடுபட்டார்.

1931 இல் மகாத்மா காந்தி கள்ளுக்கடை மறியலில் ஈடுபட வேண்டும் என்று அழைப்பு விடுத்தபோது அம்மையார் அதை ஏற்று திருவல்லிக்கேணியில் தற்போதைய பெசண்ட் ரோட்டில் திருமலாச்சாரி பள்ளி இருக்குமிடத்தின் அருகே இருசப்ப கிராமணித் தெருவில் இருந்த கள்ளுக்கடை முன் மறியல் செய்தார். சென்னை சைனா பஜாரில் தடையை மீறி ஊர்வலம் சென்றதால், தலைவர்கள் பலருடன் கோதைநாயகியும் கைது செய்யப்பட்டார். ஆறு மாதச் சிறைத் தண்டனையும் நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்ததால் கூடுதலாக நான்கு வாரம் சிறைத் தண்டனை அம்மையாருக்கு விதிக்கபட்டது.

1932இல் 'லோதியன் கமிஷனுக்கு' எதிராக நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டும், அன்னியத் துணி எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துகொண்டதற்காகவும் கோதையை வேலூர் சிறையில் அடைத்தார்கள். ஒரு எழுத்தாளர் என்ற முறையில் சிறையில் இருந்த காலத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்திக் கொண்டார்.

**தொடரும்**

# தரவுப் பாதுகாப்புச் சட்டத்தைத் தாமதிக்கக் கூடாது




ஜெர்மன் நாட்டின் சைபர் பாதுகாப்பு நிறுவனம், 'லட்சக்கணக்கான இந்திய நோயாளிகள் பற்றிய தரவுகள் இணைய தளத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன' என்று அளித்திருக்கும் தகவல் மிகவும் கவலைதருகிறது. இந்திய நோயாளிகளின் உடல்நிலை பற்றிய 10 லட்சத்து 20 ஆயிரம் ஆய்வறிக்கைகளும், 12 கோடியே 10 லட்சம் மருத்துவப் படங்களும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சிடி ஸ்கேன்கள், எம்ஆர்ஐ படங்கள் மட்டுமல்லாது, நோயாளிகளின் புகைப்படங் களும்கூட இருக்கின்றன. இத்தகைய தரவுகளைப் பெறும் நிறுவனம், அவற்றை எத்தகைய ஆய்வுக்கும் வணிகத்துக்கும் தனிப்பட்ட நோக்கத்துக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும். மருத்துவத் துறையினரின் 'சர்வர்'கள் பொது இணையதளத்துடன், எந்தவிதத் தணிக்கைப் பாதுகாப்பும் இல்லாமல் இணைக்கப் பட்டிருப்பதாலேயே இப்படி நடக்கிறது.

'தரவுகள் கசிவு' என்பது இந்தியாவில் மிகவும் இயல்பான ஒன்றாகிவிட்டது. அரசு திரட்டும் 'ஆதார்' தகவல்கள் முதல் அனைத்துத் துறைகளின் தரவுகளும் எந்தவிதத் தடையும் இல்லாமல் பலருடனும் பகிரப்படுகின்றன. வாக்காளர் பட்டியல், மத்திய - மாநில அரசுகளின் பயனாளர் பட்டியல், தனியார் துறையில் பணிபுரியும் உயர் வருவாய்ப் பிரிவினர் பட்டியல் என்று பல விதங்களிலும் தனிநபர்கள் பற்றிய தரவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியாமலேயே பகிர்ந்துகொள்ளப்படுகின்றன அல்லது விற்கப்படுகின்றன. தரவுகளின் தனித் தன்மையைப் பாதுகாக்க இந்தியாவில் வலுவான சட்டம் இல்லை. ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இதில் வழிகாட்டிகளாக இருக்க முடியும்.

'தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு-2019' இன்னமும் நாடாளுமன்றத்தில் தாக்கலாகவில்லை. நீதிபதி பி.என். ஸ்ரீகிருஷ்ணா தலைமையிலான நிபுணர்கள் குழு, 2018-ல் மின்னணுவியல்-

தகவல் தொழில்நுட்ப அமைச் சகத்துக்கு அளித்த பரிந்துரைகளின் பேரில், இச்சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணா குழுவின் நோக்கத்தையும் பரிந்துரைகளையும் உள்வாங்கியுள்ள 2019-ம் ஆண்டு சட்ட முன்வடிவு, அதன் அனைத்து அம்சங்களையும் அப்படியே ஏற்காமல் சில சமரசங்களைச் செய்துகொண்டுவிட்டது. தகவல் தருவோரிடம் இந்தத் தரவுகள் எதற்காகத் திரட்டப்படுகின்றன என்ற உண்மை உரைக்கப்பட வேண்டும், தகவல் தருவோர் தானாக முன்வந்து தகவலைத் தரும் வகையில் நடைமுறைகள் இருக்க வேண்டும், என்னென்ன தரவுகள் திரட்டப்படுகின்றன, அவற்றில் எவை சுய பயன்பாட்டுக்கும் எவை பொதுவெளிக்கும் போகக்கூடும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும், தேவைப்படும்போது தகவல்களை அளித்தவரே அவற்றைத் திரும்பப் பெறவும் உரிமை தரப்பட வேண்டும் என்றெல்லாம் குழு பரிந்துரைத்திருந்தது.



'இந்தத் தரவுகளை யாருக்காவது தருவது அல்லது விற்பது குற்றச் செயல்' என்று 2018 சட்ட முன்வடிவில் இடம்பெற்றிருந்த பிரிவு நீக்கப்பட்டுவிட்டது. அரசுத் துறைகள் அல்லது நிறுவனங்கள் தங்களுக்குத் தேவைப்படும் தகவல்களை மக்களிடமிருந்து பெற எந்தத் தடையும் இல்லை என்று விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மக்களிடம் திரட்டும் தரவுகளைப் பாதுகாக்கும் விதம் அச்சமூட்டுகிறது. வலுவான, அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய 'தரவுகள் பாதுகாப்புச் சட்டம்' அவசியம். இனியும் அதைத் தாமதப்படுத்தக்கக் கூடாது.

**- வீ. சிவசங்கர்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும் துடிப்பான, உண்மையை வெளிக்கொணர சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

**காய சித்தி லேகியம்:** சித்த மருத்துவத்தில் லேகியதிற்கு என தனி இடம் உண்டு. சித்த மருத்துவத்தின் சிறப்பே லேகியங்கள் என்ற அளவுக்கு சிறப்பு பெற்றது. பொதுவாக லேகியங்கள் குறிப்பிட்ட நோய்ககளை குனபடுதுவது மட்டும் அல்லாமல், நோயினால் பாதிக்கப்பட்டவரின் உடல் பலவீனத்தைப் போக்கி, உடலைத் தேற்றி, வலிமை உள்ளதாகவும் மாற்றுகின்றன. மேலும் லேகியம் என்ற உடன் ஆண்மைக்குறைவு என்று சொல்லும் அளவுக்கு லேகியங்களின் பயன்பாடு உண்டு. இழந்த சக்தியை மீண்டும் கொடுக்கும், உடல் நரம்புகளை முறுக்கேற்றும், அக பொலிவு கிட்டும், உடல் உறுப்புகள் இதயம், கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுநீரகம் அனைத்தும் பலம் பெறும்.

உடலின் உள்ள அங்ககங்கள் அனைத்தையும் சுத்தி செய்து நோயினை விரத்துவதால் இதற்கு காய சித்தி லேகியம் என்ற பெயரும் உண்டு. நம் உடலில் உள்ள சப்த தாதுக்களை நல்ல நிலையில் இருத்தி, உடலின் ஆரோக்கியத்தன்மையை நிலை நாட்டும் சப்த தாதுக்கள் என்னும் ஏழு வகைத் தாதுக்கள் நம் உடலில் சரியாக இருந்தால், உடலில் நோய்கள் என்பதே இல்லை. சர்க்கரை வியாதி, சப்த தாதுக்களின் குறைவால்தான் நேருகிறது. சர்க்கரை வியாதியால் தாதுக்கள் நலிந்து, அந்தரங்கம் என்பது வெறும் மனதின் ஆசையுடன் நின்று விடுகிறது, உடல் தன் இயலாமையால் ஒத்துழைப்பதில்லை. இந்த இயலாமை, பல குடும்பங்களில் விவாக ரத்து என்ற மோசமான நிலை வரை சென்றுவிடுகின்றன. அதை இந்த தாது விருத்தி லேகியம் 48 நாட்களில் சரி செய்யும். பல கூடாத பழக்க வழக்கங்களால் உண்டான வெட்டையினால் ஏற்பட்ட உடல் பாதிப்புகளையும் இது விரைவில் குணமாக்கும்.

சப்த தாதுக்கள் என்பன, நிணநீர், இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை மற்றும் சுக்கிலம் ஆகியனவாகும். இவற்றில் சுக்கிலம் எனப்படும் விந்து நாதத்தில் தான் ஒரு உயிரின் ரகசியமே புதைந்துள்ளது. நல்ல தரமான விந்து நாதம் சற்று அடர்த்தியாகவும் சந்தன மனதை ஒத்தும் இருக்கும். ஒரு மனிதனின் உடல் குணாதிசியங்கள், அவனின் ஆரோக்கியம், ஒழுக்கம், நல்ல பண்பாடு ஆகியவை அனைத்தையும் தாங்கி செல்வது இந்த விந்து நாதம் என்று சொல்லப்படும் சுக்கிலம்.



**பூனைக்காலி விதை (மற்கடி):** தாது நட்டம், கழிச்சல், கரப்பான், கை, கால் நமச்சல், வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, கை கால் நடுக்கம் நீக்கும். இவை சப்த தாதுக்களை வளப்படுத்த உதவும். இரத்தத்தை பெருக்கி சுக்கில உற்பத்தியைத் தூண்டும். அந்தரங்கத்தில் தளர்ச்சியை நீக்கக் கூடியது. சாதாரணமாக ஏற்படும் உடற் தளர்ச்சியையும் போக்கி உடலை வளம் பெறச் செய்வது. உடலின் கற்றாழை நாற்றமும், மூல நோயும் குணமாகும்.

**அமுக்கராக் கிழங்கு:** அசுவ கந்தி எனும் இம்மூலிகை உடலுக்கு அழகான சதையமைப்பும், வலுவான உடல் அமைப்பையும், நரம்புகளுக்கு ஊக்கமும் மற்றும் நரம்புகளை முறுக்கேற்றவும் உதவுகிறது. அந்தரங்கத்தில் தளர்ச்சியை போக்கக் கூடியது. சாதாரணமாக ஏற்படும் உடற் தளர்ச்சியையும் போக்கி உடலை வளம் பெறச் செய்வது. இந்திய ஜின்செங் என்றழைக்கக்கப்படும் இந்த மூலிகை உடலுக்கு மிக வலு கொடுக்கும். விளையாட்டில் ஏற்படும் சதை உடைவு, சவ்வுக் கிழிவு இவற்றை உடனே சரி செய்திடும். அமுக்கராக் கிழங்கினால் உஷ்ணம், பாண்டு, சுரம், வீக்கம், துர்நீர், வெட்டை, கட்டிகள், சலதோஷம் இவைகள் போகும்.

**ஆவாரை:** சிறுநீரக பிணிகள், தாது நட்டம்,ஆண் குறி எரிவு, உட்சூடு, நாவறட்சி, பித்தம் கண் நோய்கள், உடலைப் பொன்னிரமாக தேற்றும்.

**தேற்றான் கொட்டை:** "தேற்றான் விதையிட்டு தேற்று மைந்தரை" என்பது பழமொழி. அதுபோல உட்சூடு, தாதுநட்டம், சோகை, உடல்மெலிவு, தாதுசுரம், பெரும்பாடு, ஆண்மை பெருகி, உடல் செழிக்கும்.

**பூமிச்சக்கரைக் கிழங்கு:** உடலுக்கு வலுவைத் தந்து இரத்தத்தை பெருக்கி சுக்கில உற்பத்தியைத் தூண்டும். அந்தரங்கத்தில் தளர்ச்சியை நீக்கக்

கூடியது. சாதாரணமாக ஏற்படும் உடற் தளர்ச்சியையும் போக்கி உடலை வளம் பெறச் செய்வது. இதனால் அதி உஷ்ணம், சுரம், மூலம் போகும் உடல் பூரிக்கும்.

**திரிகடுகு:** திரிகடுகு சூரணம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்த அற்புதக் கலவை .உடலுக்கு நல்ல பசியைக் கொடுத்து உடம்பை உரமாக்கும்.

**திரிபலாதி:** திரிபலாதிச் சூரணம் என்பது கடுக்காய் ,நெல்லி வற்றல், தான்றிக்காய் மூன்றும் சேர்ந்த அற்புதக் கலவை. உடலுக்கு நல்ல உரத்தைக் கொடுத்து உடம்பை இறுக்கி இரும்பு போலாக்கும்.

**ஓமம்:** தூக்கமின்மை,குருதி கடுப்பு, நடுக்கல், ஆரம்ப வெறி, பாலவீனம், வெகு மூத்திரம் செரியாமை குணம் ஆகும்.

**விஷ்ணுகிராந்தி:** விஷ்ணு கிராந்தி, தேகத்தில் உள்ள பல பிணிகளை நீக்கும். உஷ்ண பேதி, சீத பேதி இவைகள் நீங்கும். விஷ்ணு கிராந்தியை எடுத்து கொட்டைப் பாக்களவு பாலில் அரைத்து ஒரு மண்டலம் உண்ண, எலும்பைப் பற்றிய அஸ்திசுரம் போகும். மறந்து போன அனைத்தும் ஞாபகத்துக்கு வரும். இப்பிறவி மற்றும் முற் பிறவியில், உள்ள அனைத்து விஷயங்களும் நினைவிற்கு வரும். கண்பார்வை மிக நீண்ட தொலைவு வரை தெரியும். மெலிந்து கரைந்து போன தேகம் இரும்பு போலாகி கறுத்து மின்னும். சுவாசம் மீண்டும் கைவரப் பெற்று சுழிமுனை திறந்து ஞானம் சித்திக்கும். இவ்வளவு அற்புத சக்தி நிறைந்தது விஷ்ணு கிராந்தி.

**நிலப்பனங்கிழங்கு (வராகிமூலம்):** நிலப் பனங்கிழங்கு உடலுக்கு வலுவைத் தந்து இரத்தத்தை பெருக்கி சுக்கில உற்பத்தியைத் தூண்டும். அந்தரங்கத்தில் தளர்ச்சியை நீக்கக் கூடியது. சாதாரணமாக ஏற்படும் உடற் தளர்ச்சி யையும் போக்கி உடலை வளம் பெறச் செய்வது. இதனால் உஷ்ணம், சுரம், மூலம் இவைகள் நீங்கும். மேலும் இதனால் நீரிழிவு, வெப்பம், வெண்புள்ளி, கருமேகம், கணச்சூடு, எலும்புருக்கி, பலவீனம் இவற்றைப் போக்கும்.

**நெருஞ்சில் சமூலம்:** இதனால்-சொட்டுநீர், சுரசுரப்பு, நீர் வேட்கை, முக்குற்றம், உடலுரிவு, தாது நட்டம், அழல், தமரக வீக்கம், உடல் வலுத்து, ஆண்மை பெருகும்.

**தண்ணீர் விட்டான் கிழங்கு (சதாவரி கிழங்கு):** தண்ணீர் விட்டான் கிழங்கு உடலுக்கு வலுவைத் தந்து இரத்தத்தை பெருக்கி சுக்கில உற்பத்தியைத் தூண்டும். அந்தரங்கத்தில் தளர்ச்சியை நீக்கக் கூடியது. சாதாரணமாக ஏற்படும் உடற் தளர்ச்சியையும் போக்கி உடலை வளம் பெறச் செய்வது. மேலும் இதனால் உஷ்ணம், சுரம், மூலம் இவைகள் நீங்கும். .இளமையைத் தக்க வைக்கும். உடல் பூரிக்கும்.



**ஒரிதழ்த்தாமரை:** ஓரிதழ்த் தாமரை சுக்கிலத்தையும், அழகையும் உண்டாக்கும். இதைத் தினம் உண்ண வெள்ளை,வெட்டை,நீர்ச்சுருக்கு,நீரெரிச்சல் முதலிய மேக சம்பந்தமான பிணிகள் நீங்கும். மோரில் கலக்கி உண்ண கிரகணி முதலிய நோய்கள் தீரும். ஓரிதழ்த்தாமரை ஓர் இந்திய வயாக்ரா!

**நில ஆவாரை:** பற்பல மூல வாயுக்கள், சுரம், சீழ்ச்சிரங்குகள், வயிற்று வலி, மலக்கட்டை நீக்கும். இதனால் வயதானவர்களுக்கு ஏற்படும் புரஸ்த கோள [PROSTATE GLAND ENLARGEMENT] வீக்கம் போன்றவற்றை, நீக்கும். மேலும், இந்த தாது விருத்தி லேகியத்தில் சேர்க்கப்படும் மூலிகைகள் நெருஞ்சில், நீர்முள்ளி விதை, நிலாவரை, தண்ணீர்விட்டான் கிழங்கு மேற்கண்ட வியாதிகளை, நிரந்தரமாகத் தீர்க்கும்.

**நெருஞ்சில் விதை:** இதற்கு காமரசி (காம அரசி) என்ற பெயரும் உண்டு. இது பலர் அறியாத செய்தி. சிறு நீரைப் மட்டும் பெருக்கும் தன்மை கொண்டதல்ல. ஆண்மைத் தன்மையையும் பெருக்கும் அற்புத மூலிகை. நெருஞ்சில் விதைக்கு மூத்திரக்கட்டு, சதையடைப்பு, கல்லடைப்பு, உடலெரிவு, அழல், தமறகவீகம் முதலியவை நீங்கும்.

**நீர்முள்ளி விதை (முண்டகம்):** நீர்முள்ளி விதைகள் சிறு நீரைப் பெருக்கும்.சப்த தாதுக்களையும் விருத்தி செய்யும்.சிறு நீரைப் பெருக்கும் தன்மை உள்ள நீர்முள்ளி விதை, ஆண்மைத் தன்மையை பெருக்கும். நீர்முள்ளி விதைக்கு பிரமேகம், அதிசாரம், சுபசோபை, ஆயாசம் இவை நீங்கும். சுக்கிலமும் விருத்தியாகும். உடல் குளிர்ந்து ஆண்மை பெருகும்.

**சாதிக்காய்:** தூக்கம் வராமல் சிரமப்படுவோருக்கும், நரம்புத் தளர்ச்சி உள்ளவருக்கும் சாதிக்காய் தூள்சிட்டிகை அளவு இரவு படுக்கும் போது பாலில் சாப்பிட தூக்கம் வரும் நரம்புவலுப்படும்.சாதிக்காயை அளவாகப் பயன்படுத்தினால், அந்தரங்க வாழ்வில் சிறப்பான பலன்கள் கிட்டும்.

**முருங்கைப்பூ:** பூவைப் பருப்புடன் சமைத்துச் சாப்பிட்டால் பித்த வெப்பம் அகலும். கண் எரிச்சல், நா கசப்பு, நீர் ஊறுதல் தீரும். பூவைப் பாலில் போட்டு இரவு காய்ச்சிக் குடித்தால் ஆண்மை மிகும்.

- தொடரும்

# காவிரி டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றப்படும்

## முதல்வர் பழனிசாமி அறிவிப்பு

கடலோரத்தில் இருக்கும் டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் திட்டங் களால் விவசாயம் பாதிக்கப்படு வதை தடுக்க அப்பகுதி பாதுகாக் கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டல மாக அறிவிக்கப்படும் என்று முதல்வர் பழனிசாமி தெரிவித்தார். சேலம் மாவட்டம் தலைவாசலில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி அடிக் கல் நாட்டு விழா நேற்று நடைபெற் றது. விழாவில், தமிழக தலைமைச் செயலர் சண்முகம் வரவேற்றார். துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உடு மலை ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.

விழாவில், ரூ.196.36 கோடி மதிப் பில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி, ரூ.262.16 கோடியில், ஒருங்கிணைந்த பூங்கா வுக்கான குடிநீர் திட்டம் ஆகிய வற்றுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார். மேலும், விவசாய பெருவிழா, கண்காட்சி மற்றும் கருத்தரங்கை முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்து பேசியதாவது:


விவசாயத்தில், கால்நடை வளர்ப்பு முக்கிய துணைத் தொழி லாக உள்ளது. கால்நடைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு தேவை அதி கரித்து, அவை ஏற்றுமதியும் செய் யப்படுகிறது. எனவே, கால்நடை வளர்ப்பு லாபகரமான தொழிலாக மாறிவருகிறது. மறைந்த முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்த கிராமப்புற மக்களுக்கான, விலை யில்லா கறவை மாடு வழங்கும் திட்டம், ஆடு வழங்கும் திட்டம், புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களால் கிராமப்புற மக்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளது.



தமிழகத்தில் 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, கால்நடை களின் பெருக்கம் 21 சதவீதம் அதி கரித்துள்ளது. தமிழகம் கோழிகள் உற்பத்தியில் தேசிய அளவில் முதலிடத்தையும், செம்மறி ஆடு வளர்ப்பில் 5-வது இடமும், வெள் ளாடு வளர்ப்பில் 7-வது இடமும் பெற்றுள்ளது.

ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா 1,100 ஏக்கர் பரப்பில் உருவாகிறது. இதில், நவீன கால்நடை மருத்துவமனை, நாட்டு மாடுகள், நாட்டின ஆடுகள் உள்ளிட்டவற்றை பாதுகாத்து, இனப்பெருக்கம் செய்யும் பிரிவு, பால் மற்றும் பால் பொருட்கள் பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல் உள்ளிட்ட பிரிவுகள், பால் பொருட் களை சந்தைப்படுத்துதல் போன்ற வற்றுக்கான மையமும் அமைக்கப் படும். மேலும், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு உள்ளிட்டவற்றுடன் இந்த பூங்கா உருவாக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பபல்லோ நகர் கால்நடை ஆராய்ச்சி மையத்தின் வசதிகளை இங்கு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி பூங்காவுக்கென காவிரி நீரை கொண்டு வர தனித் திட்டமும் செயல்படுத்தப்படும். தமிழக அரசின் சிறப்பான செயல்பாடுகளைப் பாராட்டி, மத் திய அரசு விருது கொடுக்கிறது. இது தமிழக மக்கள் அனைவருக்குமே



பெருமை தரக்கூடியது. ஆனால், எதிர்க்கட்சி தலைவருக்கு இதில் பெருமை கிடையாது. 'தமிழக அரசுக்கு விருது கொடுத்தவர்களை அடிப்பேன்' என எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்.

ஒரு கதையில், மந்திரக் கண் ணாடியைப் பெற்ற முதியவர் ஒருவர், அதன் மூலம் கிடைத்த 3 வரங்களைக் கொண்டு, தனது ஊரையே சொர்க்கமாக மாற்றினார். ஆனால், எதிர் வீட்டில் இருந்த பொறாமைக்காரர், அதே மந்திரக் கண்ணாடியை வாங்கி, அவரது சொந்த வளர்ச்சிக்கு பயன்படுத்த முனைந்தார். அதிலும் தோல்வி யடைந்தார். சிலருக்கு எது கிடைத் தாலும் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாது. தமிழகத்தில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் கொண்டு வந்துள்ளோம். அதிமுகவைச் சேர்ந்த நாங்கள் உழைக்கப் பிறந் தவர்கள். மக்கள் நலனுக்காக பல திட்டங்களைக் கொண்டு வந் துள்ளோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர், இது மக்கள் விரோத அரசு, வீட்டுக்கு அனுப்ப வேண் டும் என்கிறார். அரசு மீது அவதூறு களைப் பரப்பி வருகிறார்.

**திமுக ஒப்புதல்:** நெடுவாசலில் மீத்தேன் திட்டம் கொண்டு வர திமுகதான் ஒப்பு தல் கொடுத்தது. ராஜஸ்தான் பாலை வனத்தில் மீத்தேன் கண்டுபிடிக்கப் பட்டபோது, டெல்டா மாவட்டங்களி லும் மீத்தேன் எடுக்கும் திட்டத் துக்கு 1996-ம் ஆண்டு திமுகதான் ஒப்புதல் கொடுத்தது. அதனை டி.ஆர்.பாலுவே ஒப்புக் கொண்டுள் ளார். ஆனால், அந்தத் திட்டத்தை தடுத்து நிறுத்தியது நாங்கள்தான். ஹைட்ரோகார்பன் திட்டத்தை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சட்டப்பேரவையில் அறி வித்தோம். மத்திய அரசு எந்த திட்டம் அறிவித்தாலும், அதனை மாநில அரசு அனுமதித்தால்தான் நிறைவேற்ற முடியும்.

டெல்டா பகுதிகள் கடல் நீர் சார்ந்த பகுதியாக இருக்கிறது. கடல் நீர் நிலத்துக்குள் புகுந்துவிடும் வாய்ப்பு இருப்பதால் இதைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். தஞ் சாவூர், திருவாரூர் நாகை, புதுக்கோட்டை, அரியலூர், கடலூர், திருச்சி, கரூர் அடங்கிய பகுதிகள் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கப்படும். அந்த வகையில் காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாக்க சிறப்பு வேளாண் மண்டலமாக மாற்றப் படும். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் இந்த அறி விப்பை வெளியிடுகிறேன். சட்ட வல்லுநர்களை கலந்தாலோ சித்து, இதற்கு தனிச் சட்டம் கொண்டு வரப்படும். ஹைட்ரோகார்பன் உட் பட, விவசாயத்தைப் பாதிக்கும் எந்தவொரு திட்டத்தையும் தமிழகத் தில் அனுமதிக்க மாட்டோம். இவ் வாறு முதல்வர் பேசினார்.

விழாவைத் தொடர்ந்து, பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார். கண்காட்சி யில் இருந்த அரங்குகளுக்கு முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் இணைந்து சென்று, அங்கிருந்த வேளாண் கருவிகள், விவசாய விளை பொருட்கள், நாட்டு மாடுகள் உள்ளிட்டவற்றை ஆர்வத்துடன் பார்வையிட்டதோடு, விளக் கங்களையும் கேட்டறிந்தனர். விழாவில், கால்நடை பராமரிப் புத்துறை முதன்மை செயலர் கோபால், வேளாண் உற்பத்தி ஆணையர் முதன்மை செயலர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் திட்டங்கள், வேளாண் பெருவிழா குறித்து பேசினர். அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், செங் கோட்டையன், செல்லூர் ராஜூ, வேலுமணி, தங்கமணி, ஜெயக் குமார், சண்முகம், சரோஜா, உதய குமார், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் கலந்து கொண்டனர். மேலும் விவசாயிகள், மாணவர்கள், பொது மக்கள் ஆயிரக்கணக்கானோர் விழாவில் கலந்து கொண்டனர்.

– S. சுப்ரமணியன்


# சிந்தனை முத்துக்கள்

























அறிவு இருந்தால்
அனைத்தையும்
உருவாக்கலாம்,
அந்த அறிவை பெற
ஒன்றே ஒன்றுதான்
தேவை.
அது ஒழுக்கம்.

நம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்து விடும் பூவாக இருந்து விடக் கூடாது! மேலும் மேலும் மலரை உருவாக்கும் செடியாக இருக்க வேண்டும்

- அரிஸ்டாட்டில்

பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே.
உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள்.
ஏனென்றால் பொய் வாழ விடாது
உண்மை சாக விடாது..!!!

-விவேகானந்தர்



ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில் புத்திசாலியாகிறான்! ஒரு புத்திசாலி என்று பெருமை கொள்ளும் கணத்தில் முட்டாளாகிறான்

செல்வம் பெருகப் பெருக ஆசை அதிகமாவது போல, அறிவு பெருகப் பெருக அதில் ஆர்வம் அதிகமாகும்.

அறிவு ஆட்சி செய்யும் இடத்தில், ஆற்றல் துணை செய்யும்.












# மாவட்ட மருத்துவமனைகளைத் தனியாரிடம் ஒப்படைக்கக் கூடாது

மாவட்ட மருத்துவமனைகளில் ‘அரசு - தனியார் - கூட்டு’ பங்கேற்பை ஏற்கும் முடிவை மத்திய அரசு மறுபரிசீலனை செய்வது அவசியம். மாவட்ட அரசு மருத்துவ மனைகளுடன் இணைந்து தனியார் மருத்துவக் கல்லூரியைத் தொடங்கி நடத்த அனுமதியும், மருத்துவக் கல்லூரியைக் கட்டிக்கொள்ள சலுகை விலையில் நிலமும் வழங்கலாம் என்று நிதி ஆயோக் தெரிவித்த யோசனையை மத்திய அரசு நிதியறிக்கையில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. தரமான மருத்துவ சேவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்கு மத்திய, மாநில அரசுகள் மேலும் முயன்று பொதுச் சுகாதாரக் கட்டமைப்பைத் தங்கள் வசமே வைத்து, விரிவுபடுத்துவதே சரியானதாக இருக்க முடியும்.

எல்லா மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க முடியாத நிலையில் மாநில அரசுகள் இருப்பது உண்மையே. அதனால், மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவக் கல்லூரி இல்லாத இடங்களில் தனியாரை ஈடுபடுத்தினால் என்ன என்ற யோசனை ஏற்பட்டிருக்கிறது. இதனால் மருத்துவக் கல்லூரி களில் படிக்க அதிக வாய்ப்புகள் ஏற்படும், மருத்துவத்துக்காகும் செலவும் குறையக்கூடும் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

ஆனால், மருத்துவக் கல்லூரிகளுக்கு முக்கியமாகத் தேவைப்படும் நோயாளிகளை அரசு ‘இலவசமாக’ அளித்து, மாவட்ட மருத்துவமனைகளின் ‘நிர்வாகம் - பராமரிப்பை’ தனியாரிடம் ஒப்படைக்கவே இது வழிவகுக்கும். தனியார் மருத்துவமனை நிர்வாகங்களும் தங்களிடம் வரும் நோயாளிகளை இலவச




சிகிச்சை பெறுவோர், கட்டணம் செலுத்துவோர் என்று இரண்டு பிரிவுகளாக்கும். பிறகு, இவ்விருவரில் யார் முக்கியத்துவம் பெறுவார்கள் என்று விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

அரசும் தனியாரும் கூட்டாக மாவட்ட மருத்துவமனைகளை நடத்தும்போது தனியார் நிர்வாகம் நோயாளிகளிடம் உரிய கட்டணத்தைப் பெற்று, மருத்துவமனையை நடத்தலாம் என்று உத்தேசத் திட்டம் அனுமதிக்கிறது. இந்த யோசனைக்குத் தமிழ்நாடு போன்ற சுகாதார வசதியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்கள் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

இப்படிப்பட்ட மாநிலங்களில் மாவட்ட அரசு மருத்துவமனைகள் அடிப்படை வசதிகளுடன் இருப்பது மட்டுமல்லாமல், பெரும்பாலான மாவட்ட மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்ததாகவே இருக்கின்றன. சுகாதார வலையமைப்பில் முக்கியமான கண்ணிகளாக இருக்கும் மாவட்ட மருத்துவமனைகளை இப்படித் தனியாரிடம் ஒப்படைக்க மாநிலங்கள் தயாரில்லை.

அரசு மருத்துவத் துறை சேவையை மையமாகக் கொண்டது. தனியார் மருத்துவத் துறை லாபத்தில் அக்கறையுள்ளவை. அரசு மருத்துவமனைகளும் கட்டமைப்பும் வலுவாகவும் விரிவாகவும் இருந்தால்தான் தனியார் மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் கட்டணங்கள் குறையும்.

அரசால் நடத்த முடியாத சேவைகளில் லாப நோக்கம் இல்லாமல் சேவையாக நடத்தப்பட வேண்டியவைதான் தனியார் மருத்துவமனைகள். மொத்த உற்பத்தி மதிப்பில் 2%-க்கும் அதிகமாக நிதி ஒதுக்கி, மாவட்டந்தோறும் அரசு மருத்துவக் கல்லூரிகள் என்ற இலக்கை முதலில் எட்ட வேண்டும். பிறகு தரமான, செலவு குறைவான சுகாதார வசதிகளை அளிக்க வேண்டும். சுகாதாரத் துறை சேவையில் அரசு முக்கியப் பங்கு வகிப்பது மிக மிக அவசியம்.

- M. முருகம்மாள்



குணப்படுத்த முடியாத செக்ஸ் வியாதியா? குணப்படுத்த முடியும்
ஆப்பரேஷன் இல்லாமல் அறுவை சிகிச்சையின்றி ஆயுட்கால (100%) உத்திரவாதம்
Cell : 9543096605
மூலம் -PILES
மலம் கழிக்கும்போது வலி, எரிச்சல், ரத்தம், சதை கட்டி மற்றும் பல
Fees Rs.200/-
விரைவீக்கம், HYDROCELE
பவுத்திரம் FISTULA
20 வருட அனுபவம்
NAGMATA CLINIC
97/28, Ponnambalam Salai, K.K. Nagar, Ch-78. (Amman Koil Bus Stop)
SEX PROBLEM? CONTACT Dr. R. BISWAS
CALL 9841366289
ஆண்குறி சிறியதாக இருப்பது - PENIS SMALL SIZE
ஆண்மை வீரியம் இல்லாமை - IMPOTENCY
விரைவில் விந்து வெளிவருவது - SHORTLY SPERMS COMEOUT
விந்து தண்ணீர் போல வருவது - SPERMS WATER TYPE
தூக்கத்தில் விந்து வெளிவருவது - SLEEPING TIME SPERM RELEASE
பிறப்புறுப்பில் புண், சீழ், அரிப்பு - V.D., GONORRHOEA, SYPHILIS
சிறுநீர் கழிக்கும்போது வலி, எரிச்சல், சூடு - URINE PROBLEMS
குழந்தை இல்லாமை, மலட்டுத்தன்மை - INFERTILITY
ஞாபக சக்தி இல்லாமை - LOSS MEMORY
ஆண் உறுப்பு மூடிய நிலையில் இருப்பது - PHYMOSIS
நாகமாதா கிளினிக்
பு.எ. 97, பு.எ. 28, பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், சென்னை78.
Cell : 9543096605



# ஆம் ஆத்மியின் அபார வெற்றி சொல்லும் செய்தி என்ன?

மீண்டும் கேஜ்ரிவாலின் வெற்றிக்கொடி பிரம்மாண்டமாகப் பறக்கத் தொடங்கியிருக்கிறது. ஆம் ஆத்மி கட்சி செய்த சாதனைகளை வைத்தே மக்கள் அந்தக் கட்சிக்குப் பெருவாரியான ஆதரவைத் தருவார்கள் என்று கணித்தது பொய்க்கவில்லை. பாஜக காட்டிய முனைப்புக்குப் பெரிய அளவில் பலன் கிடைக்கவில்லை. ஷீலா தீட்சித் தலைமையில் (1998-2013) தொடர்ந்து 15 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது என்றாலும், அதன் பிறகு தேசிய அளவில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியும், கட்சியின் அமைப்பு சீர்குலைந்ததும் காங்கிரஸுக்குத் தொடர் தோல்விகளையே அளித்துவருகிறது. இந்த முறை டெல்லியில் காங்கிரஸுக்கும் சில தொகுதிகளாவது கிடைக்க வேண்டும் என்று கட்சித் தலைமை முயன்றது; ஆனால், காங்கிரஸால் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்க முடியவில்லை.

ஆம் ஆத்மி கட்சியானது நல்வாழ்வு, தூய நிர்வாகம் ஆகிய இரண்டு பிரதான லட்சியங்களுடன் மக்கள் சித்தாந்தத்தை வரித்துக் கொண்டது. அது செயலிலும் பிரதிபலித்ததன் விளைவாகப் பெருந்திரளான மக்களின் இதயங்களை அதனால் வென்றெடுக்க முடிந்திருக்கிறது. டெல்லி சட்டமன்ற எல்லைகளில் 49% பேர் குடிசைப் பகுதிகளில்தான் வசிக்கின்றனர். இங்கு குடிநீர், கழிப்பிட வசதிகள் கிடையாது. மின்னிணைப்புகளும் தேவைக்கேற்ப இல்லை. சாலைகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவ வசதிகளும் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில்தான் ஆம் ஆத்மியின் வரவு முக்கியத்துவம் பெற்றது.

ஆம் ஆத்மி கட்சியின் மையப் புள்ளியாக இருக்கும் அர்விந்த் கேஜ்ரிவால் அவருடைய நிர்வாகத் திறமையால் கவனம் ஈர்த்தவர். கரக்பூர் ஐஐடியில் இயந்திரப் பொறியியல் பிரிவில் பட்டம் பெற்ற கேஜ்ரிவால், மத்திய அரசுத் தேர்வில் தேர்ச்சி பெற்று பணியில் சேர்ந்தார். அரசியல் வருகையை முன்னிட்டு வருமான வரித் துறையில் இணை ஆணையராக வகித்த பதவியை ராஜிநாமா செய்தார். கேஜ்ரிவாலின் படிப்பும் அதில் விளைந்த சிந்தனையும் அவருடைய நிர்வாகத்திலும் எதிரொலித்தது. எப்படி குஜராத்தின் நிர்வாகத் திறமைக்காக மோடி செல்வாக்கும் பாராட்டும் பெற்றாரோ அதைப் போலவே கேஜ்ரிவாலின் நிர்வாகம் பேசுபொருளானது.

ஆனால், டெல்லி அரசுக்கு சுயாட்சி தருவதையோ, கேஜ்ரிவால் சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்குவதையோ மத்திய அரசு விரும்பவில்லை. சட்டத்தைக் காரணம் காட்டி அவருடைய அரசு ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட முடியாதபடி முட்டுக்கட்டைகளைப் போட்டது. எனவே, கேஜ்ரிவால் தன்னுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட கல்வி, சுகாதாரத் துறைகளில் முழுக் கவனம் செலுத்தினார். 2018-19 நிதிநிலை அறிக்கையில், டெல்லியின் கல்விக்காக ரூ.13,997 கோடியை ஒதுக்கினார். இது மொத்த நிதி மதிப்பில் 26%. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்குக் கல்விக்காக நிதி செலவிடப்படவில்லை. சுகாதார வசதிகளும் விரிவுபடுத்தப்பட்டன. எல்லா மருத்துவமனைகளும் கூடுதல் வசதிகளுடன் நவீனப்படுத்தப்பட்டன. மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டனர். யாரும் தங்களுடைய வசிப்பிடத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவு தாண்ட அவசியமில்லாதபடி அருகமை மருத்துவமனைகள் திறக்கப்பட்டன.

ஆம் ஆத்மி கட்சி என்பதன் பொருளான சாமானியர்களின் கட்சி என்பதற்கு ஏற்பவே அதன் சாதனைகளெல்லாம் சாமானியர்களோடு கரைத்துக்கொண்டதாகவே இருக்கின்றன. அதிக நிதி, நிர்வாக அதிகாரங்களை மத்திய அரசு குவித்து வைத்துக்கொண்டு துணை நிலை ஆளுநர் மூலம் தொல்லைகளை அளித்த போதிலும் செலவிடப்படாமல் இருந்த உபரி நிதியையெல்லாம் கல்வி, சுகாதாரம், மின்சாரம், அடிப்படை வசதிகளுக்குத் திருப்பிவிட்டு, தன்னுடைய திறமையை நிரூபித்துவருகிறது ஆஆக.

ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் காலை, மாலை இரு வேளைகளிலும் இலவச மருத்துவ வசதிகளை அளிக்கும் மொஹல்லா கிளினிக்குகள் அப்பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனும் அளவுக்கு மாறிவரு கின்றன. நடுத்தர வகுப்பினரும் இவற்றை நாடத் தொடங்கிவிட்டனர். இதன் வெற்றியால் கவரப்பட்டு, பிற மாநிலத் தலைவர்கள் மட்டுமல்ல; தெற்காசிய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், தென்அமெரிக்க நாடுகளின் தூதர்களும் பிரமுகர்களும் தங்களுடைய நாடுகளிலும் இந்த முன்னெடுப்பைத் தொடங்க ஆர்வம் காட்டிவருகின்றனர். சர்வதேசப் பத்திரிகைகள் பலவும் இவற்றைப் பாராட்டி எழுதின.

தகரக் கொட்டகைகளில் காற்று, வெளிச்சம் இல்லாமல் இருந்துவந்த அரசுப் பள்ளிக்கூடங்கள் இப்போது மூன்று மாடி, நான்கு மாடிக் கட்டிடங்களாகத் தனியார் பள்ளிகளுக்குச் சவால்விடும் வசதிகளுடன் உயர்ந்து நிற்கின்றன. பள்ளிகளுக்கு குடிநீர், கழிப்பிட வசதிகளுடன் போதிய காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள வகுப்பறைகள் அதிக எண்ணிக்கையில் கட்டித் தரப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரும், மதிய வேளை களில் சத்துணவும் வழங்கப்படுகின்றன. மாணவர் களுக்கென கணினிகளும் ஸ்மார்ட் வகுப்பறை களும் அளித்து, அபாரமான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு நவீன கற்பித்தல் முறையைப் போதிக்க அரசு செலவில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப் பட்டுள்ளன. மீண்டும் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் அதிக எண்ணிக்கையில் அரசுப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் திறக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் கேஜ்ரிவால்.

மத்திய அரசின் முழு ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும்கூட அர்விந்த் கேஜ்ரிவாலின் ஆட்சியால் டெல்லிவாழ் மக்களுக்கு மாதந் தோறும் 200 யூனிட் மின்சாரத்தையும் 20,000 லிட்டர் குடிநீரையும் இலவசமாக வழங்க முடிந்தது.

டெல்லி அரசின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைத்து மகளிரும் டெல்லி அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் எங்கு வேண்டுமானாலும் இலவசமாகப் பயணிக்கலாம் என்ற ஏற்பாட்டுக்கு மிகுந்த வரவேற்பு இருந்தது. பெண்களினுடைய வாழ்க்கைத் தரத்தை இது உயர்த்தியுள்ளது. பேருந்துகளிலும் மெட்ரோ ரயில்களிலும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் பயணிப்பதால் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரும் வகையில் நகரின் முக்கியப் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நகரச் சாலைகளும் பூங்காக்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள், குழந்தைகள் விளையாட விளையாட்டுத் திடல்களும் விளையாட்டுக் கருவிகளும் நகர நிர்வாகத்தால் அளிக்கப் படுகின்றன. இது அவர்களுடைய உடல், மன ஆரோக்கியத்தை வளர்க்கிறது. டெல்லியின் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றான காற்று மாசைக் குறைப்பதற்குப் பல நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துவருகிறது. அடுத்த கட்டமாக ஏழைகளுக்கும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கும் வீடுகள் கட்டித் தரும் திட்டமும், குப்பையில்லா நகரமாக டெல்லியை மாற்றும் திட்டமும் ஆஆகவிடம் இருக்கின்றன. அரசு நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மையும், ஏழைகள் மீதான பரிவுணர்ச்சியும், லஞ்ச–ஊழல் குறைந்த போக்கும் மக்களால் பாராட்டப்படுகின்றன.

**- கனகதுர்கா**

# அமைப்புசாராத் தொழில்களை முறைப்படுத்துகிறோமா? அலட்சியப்படுத்துகிறோமா?



அமைப்புசாராத் தொழில்களின் வளத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அரசின் கொள்கைகள் முக்கியத்துவம் தரவில்லை; இது மத்திய நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு சந்தையையும் பொது வெளியையும் கவனிக்கும்போது புலப்படுகிறது. அரசும் அதன் கொள்கை ஆலோசகர்களும் தாங்கள் விரும்பும் வகையில் அமைப்புசாராத் தொழில்களை முறைப்படுத்த விரும்புகின்றனர். இப்படிச் செய்வதன் மூலம் அத்துறையின் வளர்ச்சித் திறனையே அவர்கள் மழுங்கடித்து விடுவார்கள் என்று சமீபத்திய இரண்டு ஆய்வறிக்கைகள் எச்சரிக்கின்றன. முதலாவது அறிக்கை, பொருளாதார அறிஞர் சீமா ஜெயச்சந்திரன் தயாரித்து 'பொருளாதார ஆய்வுக்கான தேசிய அமைப்பு' (என்பிஇஆர்) மூலம் வெளியிடப் பட்டிருக்கிறது. அமைப்பு சாராத் தொழில்களைக் கட்டமைப்புரீதியாக முறைப்படுத்துவதன் மூலம், அவற்றின் உற்பத்தியோ விற்பனையோ வளர்ச்சியோ பெருகுவதில்லை என்று வளரும் நாடுகளில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

'சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு' (ஐஎல்ஓ) சார்பில் ஆய்வு மேற்கொண்ட சந்தோஷ் மெஹ்ரோத்ரா, அமைப்புசாராத் தொழில் அமைப்புகள் தாங்களாகத்தான் வளர்ந்து அமைப்புசார்ந்த தொழில் கட்டமைப்புக்குள் வரவேண்டுமே தவிர, கட்டாயப்படுத்துவதால் நன்மை ஏற்படாது என்று தனது ஆய்வின் முடிவாகத் தெரிவிக்கிறார். இங்கு முக்கியமான கேள்வி, அமைப்புசாரா சிறு நிறுவனங்களை முறைப்படுத்துவதன் மூலம் யாருக்கு நன்மை? முறைப்படுத்துவதால் சேவையைக் கடைக்கோடி வரை அளிக்க வேண்டிய வங்கிகளுக்குச் செலவு குறையும். இந்நிறுவனங்களைக் கண்காணிப்பதும் அவற்றின் மீது வரி விதிப்பதும் அரசுக்கும் எளிதாகிவிடும். ஆனால், இந்த நடைமுறை, அமைப்புசாரா நிறுவனங்களுக்கே மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். மானுடவியல் ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் சி.ஸ்காட் இதைத் தன்னுடைய 'சீக்கிங் லைக் எ ஸ்டேட்' நூலில் விரிவாக எழுதியிருக்கிறார்.

இந்தியா இப்போது வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர்கொண்டிருக்கிறது. அமைப்புசாராததுறையானது இளைஞர்களுக்கும், விவசாயம் சார்ந்த வேலைகளை விட்டு நகரங்களுக்குக் குடிபெயர்பவர்களுக்கும் ஏராளமான வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. எனவே, முறைப்படுத்தலால் ஏற்படக்கூடிய இன்னல்கள் என்ன என்று, அமைப்புசாராத் தொழில்புரிவோரினுடைய கண்ணோட்டத்தின் வழியாக ஆட்சியாளர்கள் முதலில் கவனிப்பது நல்லது.அரசும்அமைப்புசார்ந்ததொழில்துறையும் அமைப்புசாராத் தொழில்களை முறைப்படுத்த லுக்கு உள்ளாகத் திணிக்கும் நடைமுறைகள் முதலில் அவற்றின் உற்பத்திச் செலவைக் கூட்டு கின்றன.அமைப்புசார்ந்தஅமைப்பாகமாறுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிட இந்தச் செலவுகள் அவற்றுக்குச் சுமையாகிவிடுகின்றன என்று சீமா ஜெயச்சந்திரன் தெரிவிக்கிறார்.

அமைப்புசாரா நிறுவனங்கள் தங்களுடைய தொழில் அல்லது வர்த்தகத்தை மேலும் மேம்படுத்திக்கொள்ளத் தாங்களாகவே பல வழிகளில் முயன்று அதில் வெற்றியடைகின்றன. தங்களுடைய துறையிலேயே உள்ள மூத்த அமைப்புகளின் வழிகாட்டலைப் பின்பற்றி அவை லாபமடைகின்றன. சிறு நிறுவனங்களின் உரிமையாளர்களும் தொழிலாளர்களும் வேலையைச் செய்யும்போதே தங்களுடைய திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்கின்றனர். இதுவே திறன் வளர்ப்புக்குச் சிறந்த வழி. இதற்கு முக்கியக் காரணம், தங்களுடைய தொழிலுக்காக வேறு எங்காவது பயிற்சிக்குச் செல்ல அவர்களுக்கு நேரமோ வசதிகளோ கிடையாது.

இந்தியாவில் உள்ள அமைப்புசாரா நிறுவனங்களை உலகச் சந்தையில் சேர்த்துவிட வேண்டும் என்ற ஆசை சிலரிடம் நிலவுகிறது. மிகக் குறைந்த விலையில் தங்களுக்குப் பண்டங்களையும் சேவைகளையும் அளிக்கக் கூடிய நிறுவனங்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யவே பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் விரும்புகின்றன. பெரு நிறுவனங்களுக்குப் பண்டங்களை வழங்கப் பல்வேறு வகை நிறுவனங்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. தங்களுக்குப் பொருட்களையும் சேவைகளையும் அளிக்கும் நாடுகளில் ஊதியம் அல்லது செலவுகள் உயர்ந்தால், அதைவிடக் குறைவான செலவுள்ள நாடுகளைத் தேட ஆரம்பிக்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள். இப்படித் தேடும்போது மிகக் குறைவான விலையில் தரக்கூடிய நிலையில் இருப்பவை அமைப்புசாராத் தொழில் நிறுவனங்கள்தான். எனவே, அமைப்புசார்ந்த நிறுவனங்களாக இவற்றை மாற்ற அரசு விரும்பினாலும், சந்தையின் தேவை என்னவோ அமைப்புசாராத நிறுவனங்களை நாடுவதாகத்தான் இருக்கிறது.

இந்தியாவில் வேலைவாய்ப்பு பெருக, வருவாய் உயர, உற்பத்தி அதிகரிக்க அமைப்புசாராத் துறைகள் தொடர்பான தனது கொள்கையை அரசு மீள்பார்வை செய்வது அவசியம். இது தொடர்பாக சில நடவடிக்கைகளை அரசு எடுத்தாக வேண்டும். முதலாவதாக, அமைப்புசாராத் தொழில் துறையை மட்டம்தட்டுவதை அரசும் அதன் ஆலோசகர்களும் நிறுத்த வேண்டும். அத்துறையைக் குறுக்கவும் முயலக் கூடாது. இரண்டாவதாக, அமைப்புசாராத் தொழில் பிரிவுகளுக்குள் தொழிலாளர்களும் தொழில் முனைவோர்களும் எப்படி விரைவாகத் திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும் என்று கொள்கை வகுப்பாளர்கள் ஆராய வேண்டும். மூன்றாவதாக, அமைப்புசாராத நிறுவனங்கள் எந்த வகையில் வளர வேண்டும் என்று விரும்புகின்றனவோ அந்த வகையை ஆதரிப்பது எப்படி என்று அரசின் கொள்கை வகுப்பாளர்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். தங்களுடைய வசதிக்காக, எப்படி முறைசார்ந்த அமைப்பாக மாறுவது என்ற கருத்தை அவற்றின் மீது கட்டாயப்படுத்தக் கூடாது. நான்காவதாக, சிறுதொழில் பிரிவுகளின் வலையமைப்புகளும் தொகுப்புகளும் வலுப்படுத்தப்பட வேண்டும். ஐந்தாவதாக, தொழிலாளர் துறைச் சீர்திருத்தம் தொடர்பாக மத்திய அரசின் தொனி மாற வேண்டும்.

முதலாளிகள் நினைக்கும்போது வேலைக்கு வைத்துக்கொள்ளவும், விரும்பாதபோது வீட்டுக்கு அனுப்பவுமான நடைமுறை மாறி, தடையில்லாத



தொழில் சூழல் நிலவ வேண்டும் என்று சீர்திருத்தத்தின் மைய அம்சமாகப் பலர் கோரிவருகின்றனர். அரசிடம் அனுமதி பெறாமல் தொழில் நடத்தும் தொழில் பிரிவுகளில் வேலைசெய்யும் தொழிலாளர் எண்ணிக்கையை மேலும் பல மடங்கு உயர்த்தி அறிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். அதாவது, தொழிற்சாலை ஆய்வாளரோ வேறு அதிகாரிகளோ குறுக்கிடாதபடியும் அரசின் எந்தச் சட்டத்துக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாதபடிக்கும் தொழில் நிறுவனங்களுக்கான வடிவ இலக்கணங்களையே மாற்றிவிட வேண்டும் என்று பலர் கோருகின்றனர்.

சிறுதொழில்களில் வேலைக்கு அமர்த்தவோ நீக்கவோ இப்போதும் எந்தச் சட்டமும் தடையாக இல்லை. பெரும்பாலான சிறு பிரிவுகளில் பத்துக்கும் குறைவான எண்ணிக்கையில்தான் தொழிலாளர்கள் வேலைசெய்கின்றனர். தொழிலாளர் சட்டங்களில் திருத்தம் செய்வதாக இருந்தால், அதை வேறு மாதிரி செய்ய வேண்டும். சட்டங்கள் எளிமைப்படுத்தப்பட வேண்டும், நிர்வாகம் மேம்படுத்தப்பட வேண்டும்.

இறுதியாக, அமைப்புசாராத் துறையில் வேலை தேடுவோருக்கு மருத்துவக் காப்பீட்டுப் பாதுகாப்பும் சுகாதாரச் சேவைகளும் வலுப்படுத்தப்பட வேண்டும். பணியின்போது விபத்தால் ஊனமடைந்தால் அதற்கேற்ப இழப்பீடுகளும் தொடர் பணப்பயன்களும் வழங்கப்பட வேண்டும். வயது முதிர்ந்த தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும். தொழிலாளர் சட்டச் சீர்திருத்தங்கள் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புகளை அதிகப்படுத்துவதாக இருக்க வேண்டும். தொழில் செய்வதற்கு வசதியான சூழலை உருவாக்குகிறோம் என்ற நோக்கில், தொழிலாளர்களின் நலன்களைப் புறக்கணிக்கக் கூடாது, அவர்களைச் சுரண்டும்படி விட்டுவிடக் கூடாது.

– M. தரணி



# கற்றல் குறைபாட்டுச் சவாலை மாற்றுக் கல்விமுறையால் எதிர்கொள்வோம்

டிஸ்லெக்சியா, டிஸ்கிராபியா, டிஸ்கால்குலியா, டிஸ்பிராக்சியா என மருத்துவரீதியாகப் பல உட்பிரிவுகள் இருந்தாலும், கற்றல் குறைபாடுள்ளவர்களை 'மெதுவாகக் கற்பவர்கள்' (ஸ்லோவ் லேர்னர்ஸ்) எனலாம். எழுத்துகள் இடம் வலம் மாறித் தெரிவது, வார்த்தைகளின் பொருள் புரிய அவகாசம் தேவைப்படுவது, வாக்கியங்களை வாசிக்க அதிக நேரம் எடுப்பது போன்ற கற்றல் குறைபாடுகள், கடின முயற்சியாலும் சரியான வழிகாட்டுதலாலும் கடந்துவிடக் கூடிய சவால்தானே தவிர, ஆளை முடக்கிப் போட்டுவிடும் நோய் அல்ல.

இந்தியாவில் மட்டுமே ஆண்டொன்றுக்கு 3.5 கோடி மாணவர்கள் கற்றல் குறைபாடு உள்ளவர்களாகக் கண்டறியப்படுகிறார்கள். இந்தியாவில் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையில் இது சுமார் 7%. சராசரியாக, இந்தியப் பள்ளிகள் எல்லாவற்றிலும் கற்றல் குறைபாடுள்ள மாணவர்கள் இருப்பதாக அண்மையில் வெளிவந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தன் பிள்ளை சரியாகப் படிப்பதில்லை என்று பெற்றோர் கூறினாலோ, தன்னிடம் பயிலும் மாணவன் போதிய மதிப்பெண்கள் எடுப்பதில்லை என்று ஆசிரியர் கூறினாலோ, தான் எவ்வளவுதான் முயன்றாலும் மற்ற மாணவர்களுக்கு நிகராக நம்மால் பாடங்களைப் படித்துத் தேர்வெழுத முடியவில்லை என்று மாணவர் கூறினாலோ, அவர்கள் கற்றல் குறைபாடு உள்ள பிள்ளைகளா என்று அடையாளம் காண வேண்டுமே தவிர, அவர்களை உதவாக்கரைகள் என்று ஒதுக்கிவிடக் கூடாது.

அவ்வாறு ஒதுக்கப்படும் பிள்ளைகள் தாழ்வு மனப்பான்மையில் சுருங்கிப்போய்விடுவர். துரதிர்ஷ்டவசமாகக் கற்றல் குறைபாடு உள்ள மாணவர்களை அடையாளம் காண்பதற்கான ஓர் அறிவுசார் நடைமுறை இங்கு இல்லை. இதற்காக ஆண்டுதோறும் மனநல ஆலோசகர்களைக் கொண்டு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என முத்தரப்பு ஆய்வு முகாம் நடத்தப்பட வேண்டும்.

இத்தகைய மாணவர்களுக்கு எனப் பிரத்யேகப் பன்னோக்குப் பாடத்திட்டமும், சிறப்புப் பள்ளிகளும் தேவை. இதுதான் கற்பதில் பின்தங்கியவர்களுக்கு உதவி செய்யும் முறையிலான கற்றலில் குறைதீர்ப்புப் பயிற்சி முறை. 'நீங்கள் கற்பிக்கும் முறையில் ஒரு மாணவனால் கற்றுக்கொள்ள முடியாதபோது, அவன் கற்றுக்கொள்ள விரும்பும் விதத்தில் கற்பிக்க வேண்டும்' என்கிறார் அமெரிக்க உளவியலார் ஹோவர்ட் கார்ட்னர்.

இதை மனதில் கொண்டு இந்தியாவில் உருவாக்கப்பட்டதுதான் தேசிய திறந்தநிலைப் பள்ளிக் கல்வி நிறுவனம் (என்ஐஓஎஸ்). மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்நிறுவனத்துக்கு, நாடு முழுவதும் பல கிளைகள் உள்ளன. சென்னையிலும் இதன் அலுவலகம் செயல்படுகிறது. தேசிய கல்வி வாரியம் அங்கீகரித்துள்ள மூன்று மேனிலைக் கல்வி முறைகளுள் இந்த என்ஐஓஎஸ் முறையும் உள்ளடக்கம். இதைப் பற்றிய பரவலான அறிதல் இன்னும் தமிழகத்தில் போதிய அளவில் ஏற்படவில்லை.

**என்னென்ன சிறப்புகள்?:** மற்ற பள்ளிகளைப் போன்று என்ஐஓஎஸ் முறையில் காலை முதல் மாலை வரை வகுப்புகள் இல்லை. கற்றலில் குறைபாடுள்ள மாணவர்கள் மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையிலோ, நடனம், இசை போன்ற பிற துறைகளிலோ நாட்டம் உள்ள மாணவ மாணவிகள் அந்தந்தப் பயிற்சிகளை முடித்துவிட்டு, குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் இத்தகைய பாடத்திட்டம் கொண்ட பள்ளிகளில் வந்து பயின்றால் போதுமானது.

தேர்வெழுத மாற்றுத் தேர்வெழுதுநர் அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள், டிஸ்லெக்சியா மாணவர்களைவிட ஒரு வகுப்பு கீழ்நிலையில் படிக்கும் மாணவர்களாக இருப்பர். இவர்கள் தேர்வு எழுத கூடுதலாக ஒரு மணி நேரம் அவகாசம் வழங்கப்படும். எழுத்துப் பிழைகளுக்காக மதிப்பெண்கள் குறைக்கப்பட மாட்டாது. பொதுவாக, கல்வியைப் பாதியில் கைவிடும் மாணவர்களின் எண்ணிக்கையில் கணிசமானவர்கள் கற்றல் குறைபாடு கொண்டவர்களே. அவர்களுக்கு என்ஐஓஎஸ் கல்வி முறை ஒரு சிறந்த வினையூக்கி.

**– சரவணன்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

# கரோனா

# வைரஸை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம்?



முதலில், கரோனா வைரஸ் ஒன்றும் இந்த உலகத்துக்குப் புதிதல்ல. ஏற்கெனவே இருக்கும் ஒரு வகை வைரஸ்தான். ஆனால், சமீபத்தில் அந்த வைரஸில் நடந்த மரபணு மாற்றத்தால், அது வீரியமடைந்து உலகத்தையே பாதிக்கும் பெருந் தொற்றுக் கிருமியாக உருவெடுத்திருக்கிறது. வரலாறு பல பெரும் தொற்றுநோய்களைப் பார்த் துள்ளது. ஆனால், இந்த கரோனா நோய் இதுவரை நாம் கண்ட தொற்றுகளிலேயே மிகப் பெரியதாக உருவெடுக்கவும் வாய்ப்புள்ளது. அதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று, இதுவரை இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படாதது. இரண்டாவது, மக்கள்தொகை அதிகமுள்ள சீனாவைப் பாதித்திருப்பது.

தற்போது ஏற்பட்டுள்ள கரோனா பெருந் தொற்றால் ஏற்கெனவே நலிவடைந்துள்ள உலகப் பொருளாதாரம் மேலும் பாதிப்படையக்கூடும். உலக சுகாதார நிறுவனம் இதை 'உலக சுகாதார நெருக்கடிநிலை' என அறிவித்துள்ளது. இத்தகைய பெருந்தொற்றுகளை ஒரு நாடு எப்படி எதிர் கொள்ள வேண்டும்? தற்போதைய சூழ்நிலையை ஆராய்தல், வளங்களைச் சேர்த்தல், செயல் திட்டம் தயாரித்தல், நாட்டுக்கேற்ப மருத்துவ வழிமுறைகள் அறிவித்தல், பலவீனங்களைக் கண்டுகொள்ளுதல், நோய்த் தடுப்புப் பங்குதாரர்களுக்குத் தக்க பயிற்சியளித்தல், மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தி வைக்கும் திட்டம், நாடுகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் ஆகியவை ஒரு பெருந்தொற்றை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளில் முக்கியமானவை. மருத்துவரீதியில் துரிதமாக நோயைக் கண்டுபிடிக்கக்கூடிய பரிசோதனைகளைப் போதிய அளவு தயார் நிலையில் வைத்திருத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக மருத்துவம் செய்தல், தடுப்பூசி கண்டுபிடித்தல் ஆகியவை இதுபோன்ற நோய் மேலாண்மையில் செய்ய வேண்டியவை.

சீனாவிலுள்ள ஹூபே மாகாணத்தின் வூகான் நகரில் டிசம்பர் 2019-ல் இந்த வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. இன்றளவில் 500-க்கும் மேற்பட்ட இறப்புகள்; 28,000-க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயை சீனா விவேகத்துடனும் உறுதியுடனும் எதிர்கொண்டுவருகிறது. உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய தனிமைப்படுத்தும் முயற்சியாக 1.1 கோடி மக்கள்தொகை கொண்ட வூகான் நகரத்தை சீனா 'சீல்' வைத்துள்ளது. அந்த மாகாணம் மட்டுமல்லாமல் மற்ற மாகாணங்களுக்கும் இப்போது நோய் பரவியுள்ளது.

சீன மருத்துவ அறிவியலாளர்கள் இந்தப் புதிய வகை கரோனா வைரஸின் பல லட்ச மரபணு மூலக்கூறுகளைக் கண்டுபிடித்து, மிகக் குறுகிய காலத்தில் அதன் மரபணுவை வரிசைப்படுத்தியுள்ளனர். இதனால், அதற்கு மருந்து, தடுப்பூசி கண்டுபிடிக்க வாய்ப்புள்ளது. ஏற்கெனவே உள்ள வைரஸ் எதிர்ப்பு மருந்துகளைக் கொண்டும் நோயாளிகளிடம் சோதனை செய்துவருகின்றனர். இந்த நோய் உருவானதாகக் கருதப்படும் கடல் உணவுச் சந்தையையும் கண்டுபிடித்துள்ளனர். சீனாவைத் தவிர, உலகில் சுமார் 20 நாடுகளுக்கு கரோனா பரவிவிட்டது. பொதுவாக, பாக்டீரியாவால் ஏற்படும் நோய்களைவிட இதுபோன்ற வைரஸ் நோய்களுக்கு மருந்துகள் குறைவாகவே உள்ளன. அதற்குக் காரணம், இந்த நோய்க்கிருமிகள் மாற்றமடைவதால் நிலையான மருந்துகள் குறைவு. இதற்கு மருந்து கண்டுபிடிக்க வேண்டும் என்று பன்னாட்டு மருந்து நிறுவனங்களிடமிருந்து நாம் எதிர்பார்ப்பது ஆகாத காரியம். ஆகவே, இதுபோன்ற நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்க அரசுகளுக்குப் பொறுப்புள்ளது.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் இதுவரை இரண்டு பேருக்கு கரோனா பாதிப்பு உறுதிசெய்யப்



பட்டுள்ளது. கேரள மாநிலம், கடந்த ஆண்டு வௌவால் மூலம் பரவும் நிபா வைரஸ் நோயை மிக ஸ்திரத்துடன் கையாண்டு, அந்த நோயைக் கட்டுப்படுத்தியது. அதில் நோய்த்தொற்று ஏற்பட்டு ஒரு பெண் செவிலியர் உயிரிழந்தார். மருத்துவர்களும் மருத்துவம் சார்ந்த ஊழியர்களும்தான் எப்போதுமே அதிக நோய்த்தொற்று ஆபத்தில் உள்ளனர். ஆகவே, உரிய தற்காப்பு உபகரணங்களைக் கொடுத்து அவர்களை அரசு காக்க வேண்டும். அதற்கு 'என்95' மாஸ்க், கவுன், கையுறை, கண்ணாடி, தலையுறை, காலணிகள் அதிக அளவில் தேவை. இதை அரசு உறுதிசெய்ய வேண்டும்.

என்னதான் தற்காப்புக் கருவிகள் இருந்தாலும், அது நூறு சதவீதம் பாதுகாப்பானது அல்ல. ஆகவே, மருத்துவர்களும் செவிலியர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் நோயாளிகளைப் பார்க்கின்றனர். 'ஏர் இந்தியா' விமானங்கள் மூலம் 300-க்கும் மேற்பட்ட காய்ச்சல் இல்லாத இந்தியர்கள் சீனாவிலிருந்து அழைத்துவரப்பட்டு, ஹரியானாவில் உள்ள ராணுவ மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிப்பில் உள்ளனர். இதற்கு மட்டும் அரசு நிறுவனமான 'ஏர் இந்தியா' தேவைப்படுகிறது? எந்தத் தனியார் விமான நிறுவனமும் இதற்கு முன்வரவில்லை.

குடிமக்களைப் பாதுகாப்பது ஒரு நாட்டின் கடமை என்றாலும், இத்தாலி போன்ற பல நாடுகள் தன் குடிமக்களைக்கூட சீனாவிலிருந்து திரும்பப் பெறவில்லை. அப்படியே அவர்கள் பாதிக்கப்பட்டாலும் சீனாவிலேயே அவர்களுக்கு மருத்துவம் பார்க்கலாம். ஏனென்றால், இந்த கரோனா வைரஸ் எந்த அறிகுறியும் இல்லாமலும் ஒருவருக்குள் இருக்கலாம். இந்தியா சீனாவுக்கு நேபாளத்தின் வழியாகத் திறந்த எல்லையுடன் இருப்பதால், எல்லைக் கட்டுப்பாடின்றி நோய் உள்ளே வர வாய்ப்புள்ளது. மேலும், பல இந்தியர்கள் சீனாவில் இருப்பதால் இன்னும் பலர் இந்தியாவுக்குத் திரும்பிவர வாய்ப்புள்ளது.

பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதில் இந்தியாவுக்குப் பல சிக்கல்கள் உள்ளன. அவை பெரிய பரப்பளவு, மக்கள்தொகை நெருக்கம், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த ஊழியர்கள் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, பாதுகாப்புக் கருவிகளின் தேவை மற்றும் அரசின் உறுதிப்பாடு என்று இந்தப் பட்டியல் மிகவும் நீண்டது. இந்நிலையில், மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பில், ஹோமியோபதி மற்றும் யுனானியில் கரோனா நோய்க்கிருமிக்கு எதிராகத் தடுப்பு மருந்து உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. இது மிகவும் கண்டனத்துக்கு உரியது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மருத்துவத் துறையில் நல்ல கட்டமைப்பு உள்ளது. பெரும்பாலும் மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் உள்ளதால், ஆங்காங்கே தனிமை வார்டுகள் அமைக்கவும் தீவிர சிகிச்சை அளிக்கவும் ஏதுவாக இருக்கும். கரோனா வைரஸ் பரிசோதனை செய்வதற்கு நமக்கு வரப்பிரசாதமாக 'கிங் இன்ஸ்டிடியூட் ஆஃப் வைராலஜி' என்று சென்னை கிண்டியில் ஓர் அரசு ஆராய்ச்சி நிறுவனம் உள்ளது. ஆனால், பெரும் தொற்றுநோய்களில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்போது அதற்கேற்ப பரிசோதனைத் திறனையும் அதிகரிக்க வேண்டும். போதுமான பாதுகாப்புக் கவசங்களை அரசு முன்கூட்டியே திட்டமிட்டு வாங்க வேண்டும். மருத்துவ அதிகாரிகளும் நிலைமையின் முக்கியத்துவம் கருதிப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஓர் அரசு மருத்துவமனையில் அதன் தலைமை மருத்துவர் குத்துவிளக்கு ஏற்றி கரோனா வைரஸ் வார்டைத் திறந்துவைக்கிறார்; மற்றொரு தலைமை மருத்துவர் தனி வார்டுக்குள் முறையான பாதுகாப்பு இல்லாமல் சுமார் முப்பது பேருடன் சென்று ஊடகங்களுக்குப் பேட்டி கொடுக்கிறார். இப்படி தனிப்பட்ட விளம்பரம் தேடாமல், பாதுகாப்பாக எப்படி நோய்த்தொற்றை எதிர்கொள்வது என்பதை முயல வேண்டும்.

- V. அருணாச்சலம்

# கண்ணீர் தேசம்

விளைவித்தவன்
பிச்சைக்காரன்!

விலைக்கு வாங்கியவன்
இலட்சக்காரன்!

இரண்டு கோடிகள் கொடுத்து
ஒரு ஜோடி நாய்கள் வாங்கும்
எங்கள் தேசத்தில்!

இருபது கோடிகள் கொடுத்து
ஒருவர் மட்டுமே பயணிக்க
கார் வாங்கும் எங்கள் தேசத்தில்!

இருநூறு கோடிகள் கொடுத்து
கிரிக்கெட் அணியை ஏலமெடுக்கும்
எங்கள் தேசத்தில்!

இரண்டாயிரம் கோடிகளை கடன்சுமையாய்
தள்ளுபடி செய்யும்
எங்கள் தேசத்தில்!

இருபதாயிரம் கோடிகளை
பொழுதுபோக்க ஒதுக்கும்
எங்கள் தேசத்தில்!

இரண்டு இலட்சம் கோடிகளுக்கு
அலைக்கற்றை ஏலமெடுக்கும்
எங்கள் தேசத்தில்!

நாங்கள் விளைவித்த நெல்லை,காய்கறிகளை
ஏலமெடுக்கத்தான்
எவருமில்லை!

விவசாயிகளுக்கு மதிப்பு கொடுங்கள்!
இது விவசாயியின் கண்ணீர்!




கவிஞர் நிவேதிதா



# குடிமராமத்து திட்ட பணிக்காக ஏரிகளை தேடி அலையும் அவலம்

நீர்வள நிலவள திட்டத்தில் புனரமைப்பு பணிகளுக்கு ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு விட்டதால், முதல்வரின் கனவு திட்டமான குடிமராமத்து திட்ட பணிகளுக்கு ஏரிகளை தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள நீர்நிலைகளை மீட்டெடுக்கும் வகையில் குடிமராமத்து திட்டம் கடந்த 2016ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி ஏரிகள் மற்றும் வரத்து கால்வாய்களை பராமரித்தல், மதகுகள், கலங்கல்களை மறு கட்டுமானம் செய்தல், ஏரிக்கரைகளை பலப்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த பணிகள் விவசாய சங்கங்கள்/ பாசன சபைகள்/ ஆயக்கட்டுதாரர்களின் உதவியுடன் செய்யப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக ரூ.100 கோடி செலவில் 30 மாவட்டங்களில் 1519 ஏரிகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது கட்டமாக 2017-18ல் 29 மாவட்டங்களில் ரூ.328.95 கோடி செலவில் 1511 ஏரிகள் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில், 50க்கும் மேற்ப்பட்ட பணிகள் நடந்து வருகிறது. 2019-20ல் 29 மாவட்டங்களில் ரூ.500 கோடி செலவில் 1829 ஏரிகள் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள கடந்த ஜூன் மாதம் அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. அதன்பேரில் 600க்கும் மேற்பட்ட பணிகள் முடிவடைந்துள்ளது. 300க்கும் மேற்பட்ட ஏரிகளில் பணிகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில் நடப்பாண்டில் ரூ.1000 கோடி செலவில் 5 ஆயிரம் ஏரிகள் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்தது. இதை தொடர்ந்து 5 ஆண்டுகளாக புனரமைக்கப்படாத ஏரிகளை கண்டறிந்து, அந்த ஏரிகளில் என்னென்ன புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக விரிவான அறிக்கை தயார் செய்ய முதல்வர் எடப்பாடி நீர்வளப்பிரிவு வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதார தலைமை பொறியாளர் தனபாலுக்கு உத்தரவிட்டார்.

அதன்பேரில் கடந்த நான்கு மாதங்களாக ஏரிகளை தேர்வு செய்து அறிக்கை தயாரிக்கும் பணியில் பொறியாளர்கள் ஈடுபட்டனர். தற்போது வரை 2,640 ஏரிகள் அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி 5 ஆயிரம் ஏரிகளில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளார். எனவே, மீதமுள்ள 2,360 ஏரிகளை தேர்வு செய்து அறிக்கை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்ட பணிக்கு ஏரிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், மூன்றாவது கட்ட பணிக்கு ஏரிகள் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது. ஆனால், முதல்வர் எடப்பாடியின் கனவு திட்டமான குடிமராமத்து திட்டத்துக்கு இந்த ஏரிகள் தேர்வு செய்யப்படவில்லை. இதனால், 2,360 ஏரிகளை தேர்வு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், ஊரக வளர்ச்சித்துறை கட்டுபாட்டில் உள்ள ஏரிகளை பொதுப்பணித்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு அந்த ஏரிகளில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித்துறை முடிவு செய்துள்ளது.

– S. மோகன்

# 3வது கண்ணால் கதி கலங்கி

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற சம்பவங்கள் அதிகமாக நடந்து வந்தன. குறிப்பாக செல்போன் பறிப்பு, செயின் பறிப்பு சம்பவங்கள் அதிகரித்தது. சென்னையில் பெண்கள் தனியாக நடந்து செல்ல முடியாத நிலை இருந்தது. கோயிலுக்கும் நகையை மறைத்தபடியே பயந்த நிலையிலேயே சென்றுவந்தனர். பைக்கில் செல்லும் கொள்ளையர்கள் மின்னல் வேகத்தில் செயினை பறித்து விட்டு தப்பி வந்தனர். அதேபோல, பணம் எடுத்துச் செல்பவர்களை குறி வைத்து, அவர்களை கண்காணித்துச் சென்று பணத்தை கொள்ளையடித்து வந்தனர்.

அதேபோல ரவுடிகளும் தங்கள் எதிரிகளை நடுரோட்டில் வைத்து பொதுமக்கள் முன்னிலையில் வெட்டிச் சாய்ப்பது. துப்பாக்கியால் சுட்டு கொலை செய்வது போன்ற சம்பவங்களும் நடந்தன. இதனால் கொலை, கொள்ளைகளை தடுக்க நகர் முழுவதும் சிசிடிவி கேமராக்களை பொருத்துவது என்று சென்னை போலீஸ் கமிஷனர் ஏ.கே.விஸ்வநாதன் முடிவு செய்தார். அது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனையும் நடத்தினார். பின்னர் நகர் முழுவதும் சிசிடிவி கேமராக்களை பொருத்துவது என்று முடிவு செய்தார். அதோடு நில்லாமல், ஒவ்வொரு கடையிலும், அடுக்குமாடி குடியிருப்புகளிலும் ஏன் தனிப்பட்ட வீடுகளிலும் கேமராக்களை பொருத்துவதன் அவசியம் குறித்து சென்னை போலீஸ் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதனால், சென்னை நகர் முழுவதும் போலீசார் மற்றும் அவர்களது ஏற்பாட்டின்பேரில் 2.5 லட்சம் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கேமராக்கள் அனைத்தும் அருகில் உள்ள போலீஸ் நிலையம் மற்றும் போலீஸ் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக போக்குவரத்து விதி மீறல்கள் அனைத்தும் இந்த கேமராக்கள் மூலம் கண்டறியப்பட்டு வருகின்றன. அதில் அண்ணா நகரில் உள்ள சாலைகளில் போக்குவரத்து விதிகளை மீறினால் உடனடியாக கேமராக்கள் மூலம் கண்டறிந்து, தானாகவே விதி மீறல்களை கண்டுபிடித்து, அவர்களது வீட்டுக்கு சம்மன் அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் அண்ணாநகரில் உள்ள சாலைகளில் போக்குவரத்து போலீசார் அபராதம்



# இடத்தை மாற்றிய கொள்ளையர்கள்



விதிப்பது இல்லை. இந்த பணிகள் மற்ற சாலைகளிலும் அமல்படுத்த போக்குவரத்து போலீசார் முடிவு செய்துள்ளனர். இதனால் சாலைகளில் விதி மீறல்கள் பெருமளவில் குறைந்து வருகின்றன.

அதேபோல, நகரில் கொலை, கொள்ளை, வழிப்பறி, செயின் பறிப்பு, செல்போன் பறிப்பு சம்பவங்களும் குறைந்து வருகின்றன. சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் குற்றவாளியை போலீசார் எளிதல் கண்டறிந்து, அவர்களை கைது செய்து விடுகின்றனர். இதனால் குற்றவாளிகள் சென்னை யில் குற்றச்செயல்களில் ஈடுபடுவது குறைந்துள்ளது. அவர்கள் எல்லாம் தற்போது திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் அமர்ந்துகொண்டு, தங்கள் கைவரிசையை காட்டி வருகின்றனர். இதனால்தான் இந்த இரு மாவட்டங்களிலும் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அதில் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கொலைகள் அதிகமாக நடக்கின்றன. குறிப்பாக ரவுடிகள் மோதலில் அதிக கொலைகள் நடக் கின்றன. பட்டப்பகலில் வெடிகுண்டுகளை வீசியும் கொலை செய்கின்றனர். இந்த வழக்குகளில் கூட குற்றவாளிகளை போலீசாரால் எளிதில் பிடிக்க முடியவில்லை. அதேபோல, திருவள்ளூர் மாவட் டங்களில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக மீஞ்சூர், பொன்னேரி, திருத்தணி, திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி ஆகிய இடங் களில் அதிக அளவில் வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. செயின் பறிப்பு சம்பவங்களும் அதிகரிக்கின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், மதுராந்தகம் ஆகிய இடங்களில் கொள்ளைகள் அதிகமாக நடக்கின்றன.

இந்த கொள்ளை சம்பவங்களுக்கு முக்கிய காரணம், கொள்ளையர்கள் சென்னை நகரை காலி செய்து விட்டு பக்கத்து மாவட்டங்களில் தஞ்சமடைந்ததுதான் காரணம் என்கின்றனர் சென்னை நகர போலீசார். இந்த இரு மாவட்டங்களில் எங்குமே கேமராக்கள் காணப் படவில்லை. இது குறித்த விழிப்புணர்ச்சியை மாவட்ட போலீசார் ஏற்படுத்தவில்லை. போலீசாரும் கேமரா அமைப்பதற்கான ஏற்பாடு களை செய்யவில்லை. இதனால் குற்றங்கள் நடந்து பல மாதங்களாகியும் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாமல் போலீசார் திணறி வருகின்றனர். ஒரு குற்றம் நடந்தால், அதை விசாரிக்கும் போலீசார், பின்னர் மற்றொரு குற்றம் நடந்தவுடன் பழைய குற்றத்தை கண்டுபிடிக்க முடியாமல், அப்படியே விட்டு விடுகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். சிரமத்துக்குள்ளாகின்றனர். குறிப்பாக சென்னைக்கு அருகில் உள்ள பகுதிகளிலாவது கேமராக்கள் பொருத்த திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட போலீசார் முயற்சிக்க வேண்டும்.

போலீசாரால் குற்றங்களை கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டுபிடிக்க முடியாத வழக்குகளில் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் போலீசார் குற்றங்கள் குறித்து வழக்குப்பதிவு செய்யாமல், பொதுமக்களை திருப்பி அனுப்பும் நிலை உள்ளது. தொடர்ந்து வந்து புகார் செய்து வந்தால், உண்மையான பாதிப்புகளை வழக்காக பதிவு செய்யாமல், பெயருக்கு கொள்ளை போனதாக வழக்குப்பதிவு செய்யும்நிலைதான் இந்த இரு மாவட்டங்களிலும் உள்ளது. இதனால் உடனடியாக கேமராக்கள் பொருத்தினால் குற்றவாளிகளை எளிதாக கைது செய்ய முடியும். அப்படி இல்லாவிட்டாலும், தாங்கள் மாட்டிக் கொள்வோம் என்று பயந்தாவது குற்றவாளிகள் வேறு மாவட்டங்களுக்கு தப்பிச் செல்வார்கள். இதனால் சென்னை நகர போலீஸ் கமிஷனர் ஏ.கே.விஸ்வநாதனிடம் கேட்டாவது பக்கத்து மாவட்ட அதிகாரிகள் அந்த திட்டத்தை அமல்படுத்த முன் வரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**– வீர ஆறுமுகம்**

# பெற்றோர் செய்த பாவம் பிள்ளைகளை சேரும்

## ஒரு பக்க சிறுகதை

குருசேஷத்திர போர் முடிந்த சமயத்தில் திருதராஷ்டிரன், கிருஷ்ணரிடம் கிருஷ்ணா நான் குருடனாக இருந்தபோதும், விதுரர் சொல் கேட்டு தர்ம நியாயங்களுடன் அரசாட்சி செய்தேன். அப்படியிருக்க ஒருவர்கூட மீதமில்லாமல் எனது 100 பிள்ளைகளும் இறந்ததற்குக் காரணம் என்ன? என்று வினவினார்.

கிருஷ்ணர் - உனக்கு நான் ஒரு கதை சொல்கிறேன். அதற்குப் பதில் சொன்னால், நீ கேட்ட கேள்விக்கு பதில் தருகிறேன். என்றார். கதையை சொல்ல ஆரம்பித்தார்.

நீதி தவறாது ஆட்சி செய்த அரசனிடம் வறியவன் ஒருவன் சமையல்காரனாகச் சேர்ந்தான். மிகச் சுவையாக சமைப்பது, அவரை பிரித்யேகமாகக் கவனிப்பது என அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகளினால் வெகு சீக்கிரமே தலைமை சமையல் கலைஞனாக உயர்த்தப்பட்டான்.

அரசருக்கு வித்தியாசமான சுவையை செய்து கொடுத்து பரிசு பெறும் நோக்கில், அவனுக்கு விபரீதமான யோசனை ஒன்று தோன்றியது. அதன்படி அரண்மனைக் குளத்தில் இருந்த அன்னத்தின் குஞ்சு ஒன்றினைப் பிடித்து ரகசியமாய் சமைத்து அரசருக்குப் பரிமாறினான்.

தான் சாப்பிடுவது இன்னதென்று தெரியாமல் அச்சுவையில் மயங்கிய மன்னர், அதை மிகவும் விரும்பிச் சாப்பிட்டதோடு அடிக்கடி சமைக்குமாறு கட்டளையிட்டார்.அதோடு அந்தச் சமையல்காரனுக்கு பெரும் பரிசும் அளித்தார்.

திருதராஷ்டிரா இப்போது சொல் என்றார் கிருஷ்ணன்.

அரசன், சமையல் கலைஞன் இருவரில் அதிகம் தவறிழைத்தவர் யார்? என்று பகவான் கேட்டார்.

ஒரு முறை வசிஷ்டரின் சமையல்காரன் தான் அறியாமலேயே புலால் கலந்த உணவை அவருக்கு வைத்துவிட்டார். ஆயினும் அதை வசிஷ்டர் கண்டுபிடித்து, அவனுக்கு சாபமிட்டார், அந்த விவேகமும் எச்சரிக்கையும் இந்த அரசனிடம் இல்லையே!

சமையல்காரன் பணம், பரிசுகளுக்கு ஆசைப்பட்டிருப்பான். அதனால் அவன் செய்த தவறு சிறியது. ஆனால் பல நாட்கள் அசைவம் உண்டும் அதைக் கண்டுபிடிக்காத அரசன்தான் அதிக தவறிழைத்தவன் ஆகிறான் என்றார் திருதராஷ்டிரன்.

புன்னகைத்த கண்ணன், திருதராஷ்டிரா நீயும் ஓர் அரசனாக இருந்தும், நியாயம் தவறாது மன்னன் செய்ததே தவறு எனக் கூறினாய்.

அத்தகைய நீதிதான் பீஷ்மர், துரோணர் போன்ற சான்றோர் சபையில் உன்னை அமர்த்தியது. நல்ல மனைவி, நூறு குழந்தைகள் என நல்வாழ்க்கையைத் தந்தது.

ஆனால், நான்சொன்ன கதை உன்னைப் பற்றியதுதான். சென்ற பிறவியில் நீயே உன் தவறால் நூறு அன்னக் குஞ்சுகளை உணவாகச் சாப்பிட்டிருக்கிறாய்.

அந்த அன்னங்கள், அதன் தாயார் எத்தகைய வேதனை அடைந்திருக்கும் என்பதை உன் நூறு பிள்ளைகளை இழந்து நீ அறிந்துகொள்கிறாய். ஆனால் தினம் தினம் பார்த்தும் உனக்கு சைவ, அசைவ உணவுகளுக்கிடையே வேறுபாடு தெரியவில்லை. அப்புறம் உனக்கு கண் எதற்கு? அதனாலேயே நீ குருடனானாய்.

தெய்வத்தின் சன்னிதானத்தில் ஒரு போதும் நீதி தவறாது. அவரவர் வினைக்கேற்பவே அவரவர் வாழ்வு அமையும்! என்றார்.


தன்வினையே தன்னைச் சுட்டதென்பதை உணர்ந்த திருதராஷ்டிரன் வாயடைத்து நின்றான்.

நாம் செய்த தவறுகள் நம் பிள்ளைகளைச் சேரும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்வோம். நல்லதே நினைப்போம். நல்லதே செய்வோம்.

- நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.





# BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR

## World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.

For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.

- Benefits to over **10 crore** poor and vulnerable families and more than **50 crore** beneficiaries across the country
- Annual healthcare benefits of up to **Rs. 5 Lakh** for every entitled family
- Access to healthcare services in all government and empanelled private hospitals

Toll-Free helpline number
**14555/1800111565**

www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Posted at EGMORE RMS / 1 (Patrika Channel). March - 2020
RNI No.: **TNTAM44870/2012.** Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App